இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 31, 11 ஒக்டோபர் 2024 இதழ்:- 19

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

# இலங்கை தொடர்பான எந்தவொரு ஜெனிவா தீர்மானத்திற்கும் அநுர அரசு எதிர்ப்பு! போர்க் குற்ற பொறிமுறைகளையும் ஏற்காதாம்!



ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் அமர்வில் சமர்ப்பிக்கப்படும் எந்த தீர்மானத்தின் 51-1 நகல் வடிவையும் இலங்கை தொடர்ந்து எதிர்க்கும் என அமைச்சரவை பேச்சாளர் விஜிதஹேரத் தெரிவித் துள்ளார். (3ம் பக்கம் பார்க்க)

## அநுரகுமார மீதான கண்மூடித்தனமான விசுவாசமும் கவனிக்கப்பட வேண்டியதும்!

# காலையில் தமிழரசுக்கட்சியில் விண்ணப்பம் மாலையில் “சங்கு”டன் சங்கமம் சசிகலா!

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் யாழ்ப் பாணம் தேர்தல் மாவட்ட பெண் வேட்பாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ரவிராஜின் பாரியார் திருமதி சசிகலா ரவிராஜ் வேட்புமனுவில் 07 செப் 2024 திங்கட்கிழமை கையெழுத்திட்டு ள்ளார். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறு ப்பினரான சசிகலா கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் (7ம் பக்கம் பார்க்க)



## தமிழரசுக்கட்சியில் இருந்து மாவை. சேனாதிராஜா விலகுவதாகச் செய்திகள்! உத்தியோகபூர்வ விலகல் கடிதம் கிடைக்கவில்லை என்கிறார் செயலாளர்!

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

ஈழநாடு:- மின்னிதழில் வாசிக்க
eelanadu.ca

# “பார் வேந்தன்” விக்கிக்கு கம்பவாருதியின் மடல்!

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!



என் இனிய உறவுகளே! இவர்களுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்த நாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 23 செப்டம்பர் முதல் 14 வது வருடத்தில் தொடரும் சேவை ஈழநாடு பத்திரிகையின் அறப்பணி. தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

“ஒரு முகவர் இரு சேவைகள்”
“One Broker Two Services”
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

Team SIVA
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
Sales Representative B.Comm.
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



21 Years Real Estate Experience


**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

**Bus: 416.298.3200**
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

**Simcoe St N. & Conlin Rd**



**Oshawa** $279,000
0 Beds • 1 Bath • 1 Rooms
Welcome To University Studios!

**Sheppard Ave & Allen Rd**




**Toronto** $619,000
2+1 Beds • 2 Baths • 4+1 Rooms
Close To Subway, Ttc, York University

**Neilson/Tapscott**




**Scarborough** $445,000
2 Beds • 2 Bath • 5 Rooms
Close to the Hwy 401 and the TTC

**Kennedy Rd / Hwy 401**




**Scarborough** $699,000
2+1 Beds • 2 Bath • 6 Rooms
Freshly painted & renovated!

**Sheppard & Neilson**



**Malvern** $699,900
3 Beds • 2 Baths • 6 Rooms
Low Maintenance Fees!

**Simcoe St N/ Brittania Ave**




**Oshawa** $770,000
4 Beds • 3 Baths • 9 Rooms
Corner lot Just like Semi Townhouse

**McLevin Ave & Morningside**




**Malvern** $880,000
3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Finished Basement

**Townline Rd & Shankel Rd**



**Oshawa** $999,900
3 Beds • 4 Baths • 8 Rooms
Close To Highway 401, 418, 407

**Sheppard Ave E / Neilson Rd**



**Scarborough** $842,000
3 Beds • 3 Baths • 6+2 Rooms
FULLY RENNOVATED

**Church St N & Rossland Rd W**




**Ajax** $899,999
3 Beds • 3 Baths • 6 Rooms
Hardwood flooring throughout

**Church St N & Rossland Rd W**




**Ajax** $899,999
3 Beds • 3 Baths • 6 Rooms
Upgraded Hardwood Floors

**Kellough St/ Mcneil St**




**Innisfil** $1,295,000
4+1 Beds • 5 Baths • 11+3 Rooms
Open concept, large eat-in kitchen

**Ninth Line/Donald Cousens**



**Markham** $630,000
2 Beds • 2 Baths • 4 Rooms
Minutes to Stouffville Hospital


**Mara & King**



**Beaverton** $729,800
4 Beds • 3 Baths • 9 Rooms
2300 Square Foot Home

**Finch Ave E/ Morningside Ave**

FOR LEASE



**Scarborough** $2,500
3+1 Beds • 3 Bath • 10+3 Rooms
Nicely Maintained And Cleaned

**Scarborough Golf/Lawrence Ave**

FOR LEASE



**Scarborough** $1,900
2 Beds • 1 Bath • 4 Rooms
Lovely Corner Bungalow

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# இலங்கை தொடர்பான எந்தவொரு ஜெனிவா தீர்மானத்திற்கும் அநுர அரசு எதிர்ப்பு! போர்க் குற்ற பொறிமுறைகளையும் ஏற்காதாம்!



ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் அமர்வில் சமர்ப்பிக்கப் படும் எந்த தீர்மானத்தின் 51 –1 நகல்வடிவையும் இலங்கை தொடர்ந்து எதிர்க்கும் என அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம் பெற்ற யுத்த குற்றங்கள் குறித்த ஆதாரங்களை சேகரிக்கும் வெளிப்புற பொறிமுறைக்கான அதிகாரங்களை நீடிக்கும் எந்த தீர்மானத்தையும் இலங்கை ஏற்றுக் கொள்ளவில்லை என அவர் தெரிவித்துள்ளார். அமைச்சரவையின் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தற்போதைய அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானத்தின் நகல்வடிவை நிராகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். எனினும் உள்நாட்டு பொறிமுறை மூலம் நல்லிணக்கம் உட்பட மனித உரிமை பிரச்சினைகளிற்கு தீர்வை காண்பது குறித்து அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மனித உரிமை பேரவையுடனும் வழமையான மனித உரிமை பொறிமுறையுடனும் தொடர்ந்தும் ஒத்துழைப்பு அர்த்தபூர்வமான பேச்சு வார்த்தைகளை முன்னெடுக்கின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப் பட்டுள்ளார், தேர்தலின் பின்னர் புதிய அரசாங்கம் தெரிவு செய்யப்படும் என தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான விஜித ஹேரத் நாங்கள் எங்கள் நிலைப்பாட்டை ஜெனீவாவிற்கு தெரியப்படுத்துவோம் என குறிப்பிட்டுள்ளார்.

இந்த தீர்மானத்தில் உள்ள பல விடயங்களை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது, மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் எனினும் இதற்கு காலம் தேவை, ஜெனீவாவில் இந்த நிலைப்பாட்டை தெரியப் படுத்துவோம் என விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

# சீனா -இந்தியா - அமெரிக்கா எல்லாம் எங்களுக்கு ஒன்று தான்

இராஜதந்திர உறவுகளில் அரசாங்கம் அனைத்து நாடுகளுடனும் சமமான முறையில் செயற்படுவதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர், இந்தியாவை போலவே சீனாவையும் கையாளுவதாக தெரிவித்தார்.

சீன இராணுவப் பயிற்சிக் கப்பல் ஒன்று இலங்கைக்கு வருவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். இக்கப்பல் இம்மாதம் இந்நாட்டுக்கு வரவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

நாம் எந்த நாட்டையும் சிறப்பானதாகக் கருதவில்லை. நாடு சிறியதோ பெரியதோ, அனைத்து நாடுகளுடனும் இலங்கை இராஜதந்திர உறவுகளைப் பேணுகிறது. எங்களுக்குள் எந்த வேறுபாடும் இல்லை. சீனா, இந்தியா, அமெரிக்கா, ரஷ்யா, கியூபா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளுடன் இராஜதந்திர உறவுகளைக் கொண்டுள்ளோம். இந்தியாவை போலவே சீனாவையும் கையாளுகிறோம். சீனா ஊடாக விகாரைகளுக்கு சோலார் பேனல்களை வழங்கும் திட்டம் உள்ளது. அதில் தலையிடுகிறோம். இம்மாதம் இன்னும் சில தினங்களில் சீன இராணுவப் பயிற்சிக் கப்பல் ஒன்று இலங்கைக்கு வரவுள்ளது.

அதற்கான அனுமதியை வழங்கியுள்ளோம். இதனால் இலங்கையின் பாதுகாப்புக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. முன்னதாக, அமெரிக்க, இந்திய மற்றும் ஜெர்மன் போர்க் கப்பல்கள் வந்துள்ளன. இது போன்ற இராஜதந்திர உறவுகளில், அனைத்து நாடுகளுடனும் சமமாக நடந்து கொள்கிறோம் என்றார்.

# டக்ளஸ் - முருகன் சந்திப்பு!



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு, 31 வருடங்களின் பின்னர் விடுவிக்கப்பட்ட முருகன், முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை 08 ஒக் 2024 செவ்வாய்க்கிழமை நேரில் சந்தித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் அலுவலகத்தில் குறித்த சந்திப்பு இடம் பெற்றுள்ளது. கொலை வழக்கில் கைது செய்யப் பட்டு 31 வருடங்களின் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் விடுதலை செய்யப் பட்டார்.

முருகன் இலங்கையை சேர்ந்தவர் என்பதால் இலங்கை செல்வதற்கு ஆவணங்கள் இல்லை எனும் காரணத்தால் திருச்சி சிறப்பு முகாமில் சுமார் ஒன்றை வருட காலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அவரை இலங்கைக்கு மீள அழைத்து வர அப்போது கடற்தொழில் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தா சில நடவடிக்கைகளை எடுத்திருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

அதேவேளை இவருடன் கைது செய்யப்பட்ட சாந்தன் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த போதே கடந்த பெப்ரவரி மாதம் நோய்வாய்ப்பட்டு உயிரிழந்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544


# யாழ்ப்பாணம், மட்டக்களப்பில் களம் இறங்கும் தமிழரசுக்கட்சி வேட்பாளர்கள் வேட்பு மனு தாக்கல்




பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக இலங்கை தமிழ் அரசுக் கட்சி வேட்பு மனுவை யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று 10 ஒக் 2024 வியாழக்கிழமை கையளித்தனர்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ். தேர்தல் மாவட்டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன், ச.சுகிர்தன், கே.சயந்தன், இமானுவேல் ஆர்னோல்ட், தி.பிரகாஷ், ச. இளங்கோ, ச. சுரேக்கா, சி.கிருஷ்ணவேணி ஆகியோர் போட்டியிடவுள்ளனர்.

இத்தேர்தலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி வீடு சின்னத்தில் போட்டியிடுகிறது. இதேவேளை வேட்புமனுத் தாக்கலின் பின்னர் வேட்பாளர்கள் தந்தை செல்வாவின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

முன்னதாக தமிழரசு கட்சியின் அலுவலகத்தில் வேட்பாளர்களிடம் கையொப்பம் வைக்கப்பட்ட நிலையில், இந்த நிகழ்வில் இலங்கை தமிழரசு கட்சியின் முன்னாள் தலைவர் மாவை சேனாதிராசா, கட்சியின் பொருளாளர் கனக சபாபதி போன்றவர்கள் கலந்துகொள்ளவில்லை. மேலும், இந்த நிகழ்வில் கட்சியின் உப தலைவர் சி.வி.கே. சிவஞானம், குலநாயகம் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பாராளுமன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வீடு சின்னத்தில் போட்டியிடும் இலங்கை தமிழ் அரசு கட்சியின் வேட்பாளர்கள் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தலைமையில் வேட்புமனு தாக்கல் செய்தனர். கட்சியின் வேட்பாளர்கள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில் வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தலைமையில் ஞானமுத்து சிறினேசன், மட்டு. மாநகர சபை முன்னாள் மேஜர் தியாகராசா சரவணபவன், ஏறாவூர் பற்று முன்னாள் தவிசாளர் சின்னத்துரை சர்வானந்தன், வைத்தியர் ஸ்ரீநாத், இளைஞர் அணித் தலைவர் கிருஷ்ணபிள்ளை செயோன், அருணாச்சலம் கருணாகரன், ஜெயந்தி உட்பட 8 வேட்பாளர்கள் களமிறங்குகின்றனர்.

## தமிழரசின் கொள்கைக்கு வாக்களியுங்கள்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொள்கையைச் சுமந்து தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்யுங்கள் என தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதி ராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ் தேர்தல் மாவட்டத்துக்கான வேட்புமனு, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முதன்மை வேட்பாளர் சிவஞானம் சிறீதரனால், யாழ் மாவட்டச் செயலகத்தில் கையளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தந்தை செல்வா நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய பின்னர், கட்சியின் தலைவரை அவரது இல்லத்தில் சந்தித்து ஆசிபெறச் சென்ற சிறீதரனுக்கு வாழ்த்து தெரிவிக்கையில் இதனைத் தெரிவித்தார். மேலும் இலங்கை தமிழரசு கட்சியின்




கொள்கைகள் வெற்றி பெற நீங்கள் செயற்படவேண்டும் தேர்தலில் வென்று வரத் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

இதேவேளை தமிழரசு கட்சியின் யாழ். மாவட்டத் திற்கான வேட்பாளர்களின் பெயர் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது. தந்தை செல்வா மற்றும் இரும்பு மனிதர் நாகநாதன் ஆகியோரின் பேரனும் சமூக செயற்பாட்டாளரும் சட்டத்தரணியுமான இளங்கோவன் தேர்தலில் போட்டியிட கட்சியின் தலைமை வாய்ப்பு வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.




கனடா – அருள்மிகு

**ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்**

104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அனைத்து அம்பாள் அடியார்களிற்கும் வணக்கம்!

அருள்மிகு கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் இருப்பிடம் மற்றும் கும்பாபிசேகம் சம்பந்தமான முக்கியமான கலந்துரையாடல் 13 ஒக்டோபர் 2024 ஞாயிற்றுக்கிழமை மதியம் 2.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அங்கத்துவப் பணம் செலுத்திய அம்பாள் ஆலய அங்கத்தவர்களை கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். இதுவரை அங்கத்துவப் பணம் செலுத்தாதவர்கள் அங்கத்துவப் பணத்தைச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

ஓம் தாயே மகமாரி – நிர்வாகசபை 18 செப் 2024

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# தேர்தலில் போட்டியிட விருப்பம் தெரிவித்து கட்சி இடம் கொடுக்காமையால் தமிழரசை விட்டு வெளியேறிய சட்டத்தரணி தவராசாவின் திடீர் தமிழ்த் தேசியப் பற்று!



உள்ளக முரண்பாடுகளை தொடர்ந்து தமிழ் அரசு கட்சியிலிருந்து விலகுகிறார் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா. இது தொடர்பிலான அறிவிப்பினை அவர் விடுத்துள்ளார்.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் வேட்பாளர்கள் நியமனம் தொடர்பில் நடைபெற்ற இழுபறியின் தொடராக யாழ்.மாவட்டத்தில் தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிடவுள்ளவர்கள் எனக் குறிப்பிட்டு ஒன்பது பேர் கொண்ட பெயர்ப் பட்டியலை தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தர் சுமந்திரன் வவுனியாவில் வெளியிட்டுள்ளார்.

அவ்வகையில் சிவஞானம் சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன், எஸ்.ஈ.சீ. இளங்கோவன், கேசவன் சயந்தன், சந்திரலிங்கம் சுகிர்தன், சுரேக்கா சசீந்திரன், தியாகராஜா பிரகாஸ், இமானுவேல் ஆர்னோல்ட், கிருஸ்ணவேணி சிறிதரன் ஆகியோரின் பெயர்கள் இடம் பெற்றிருந்தன.

இந்நிலையில் தேர்தலில் போட்டியிட சந்தரப்பம் கோரியிருந்த நிலையில் அது கிடைக்காமையால் தவராசா வெளியேறும் முடிவை அறிவித்துள்ளார். அது மாத்திரமன்றி தன்னை ஒரு தீவிர தமிழ்த் தேசியவாதியாகவும் விடுதலைப் புலியாகவும் காட்ட முற்படுவது தான் வேடிக்கையான விடயம்.

1988 பிற்பகுதிகளில் 1990களில் முற்பகுதியில் வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்து கொழும்புக்கு வந்து இருந்த தமிழ்இளைஞர்களை கொழும்பு லொட்ஜ் உரிமையாளர்களும் பொலிசாரும் இவரும் இணைந்து கைது செய்வது நீதிமன்றத்திற்கு கொண்டு செல்வது விடுவிப்பதும் அவர்களது குடும்பத்தினரிடமிருந்து பெருந்தொகை பணத்தைப் பெற்று பங்கு போடுவதும் வழமையான ஒன்றாகவே நடந்து வந்த நிகழ்வாகும். அப்படிப்பட்ட இந்தச் சட்டத்தரணி இன்று தமிழ்த்தேசியப் போராளி. சரி அவரது அறிக்கையைப் பாருங்கள்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அனைத்துப் பதவி மற்றும் பொறுப்புக்களில் இருந்தும் விலகுவதாக ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்துள்ளார்.

இதன்படி, இலங்கை தமிழரசுக் கட்சியின் கொழும்பு கிளைத் தலைவர் பதவி, இலங்கை தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு தலைவர், மத்திய குழு உறுப்பினர் ஆகிய அனைத்துப் பொறுப்புக்களில் இருந்தும் விலகுவதாக அவர் அறிவித்துள்ளார். அறிக்கை ஒன்றின் மூலம் அவர் இதனை அறிவித்துள்ளார். குறிப்பாக தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் நியமனத்திற்காக விண்ணப்பங்கள் கோரப் பட்டிருந்த போது அதில் யாழ். கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தினுடைய மற்றும் கொழும்பு வாழ் மக்களினுடைய கோரிக்கைக்கு அமைவாக தான் விண்ணப்பத்தை கொடுத்திருந்ததாகவும், அதனை எந்தவொரு காரணமும் இல்லாமல் சுமந்திரன் நிராகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சுமந்திரன் தான் சார்ந்த அணியை வேட்பாளர் பட்டியலில் தெரிவு செய்து கட்சிக்காக தொடர்ச்சியாக பாடுபடுகின்ற மிக முக்கியமான திறமைசாலிகளை உள்ளெடுக்காததன் அடிப்படையிலும் தான் நியமிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்த மக்களுக்கு பொறுப்புச் சொல்ல முடியாத ஒரு கட்டத்தினால் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தான்தோன்றித் தனமாக தமிழரசுக் கட்சியின் தேர்தலில் தோல்வியுற்ற பின்னரும் கட்சியை பதில் பொதுச் செயலாளர் சத்தியலிங்கத்தின் ஊடாக முழுச் செயற்பாடுகளையும் (22ம் பக்கம் பார்க்க)

## 13- அநுர என்ன செய்வார்?

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை சந்தித்த கலாநிதி சு. ஜெய்சங்கர் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் அவசியப்பாட்டை வலியுறுத்தியிருக்கின்றார். ஜே. வி. பியின் தலைவரிடம் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துமாறு இந்தியா கூறுமளவுக்கு தென்னிலங்கை அரசியல் மாற்றமடைந்திருக்கின்றது. ஆனால் ஒன்றுமட்டும் மாறவேயில்லை.

அதாவது கொழும்பின் கதிரையில் எவர் இருந்தாலும் இந்தியாவின் தலையீடு அல்லது கரிசனை என்று வருகின்ற போது இறுதியில் 13ஆவது திருத்தச் சட்டம் தான் மேசைக்கு வருகின்றது. 2015இல் மைத்திரிபால சிறிசேன அதிகாரத்துக்கு வந்தபோது அரசமைப்பின் 13ஆவது திருத்தத்திலிருந்து முன்னோக்கி பயணிப்பதற்கான அரிய வாய்ப்புக் கிடைத்தது. அதற்கான பாராளுமன்ற பெரும்பான்மையும் இருந்தது. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்தர்ப்பத்தை நழுவ விட்டது.

தமிழர் தரப்பு சந்தர்ப்பங்களை நழுவ விட்ட சந்தர்ப்பங்கள் ஏராளம். தமிழர் அரசியலில் நழுவ விட்ட சந்தர்ப்பங்கள் தான் கூடிச் செல்கின்றனவே தவிர சந்தர்ப்பங்களை கெட்டியாகப் பற்றிக் கொண்டு முன்னோக்கிப் பயணிக்கும் திறனை தமிழர் தரப்பு இதுவரையில் நிரூபிக்கவில்லை. இனியாவது நிரூபிக்க வேண்டுமென்று பிரார்த்திப்போமாக!

மாற்றங்கள் மட்டுமே நிரந்தரமானது. அரசியலில் மாற்றங்களை புறந்தள்ளுபவர்கள் அரசியலில் இருந்து புறந்தள்ளப்படுவார்கள். இந்த உண்மையை அறிந்து அதற்கேற்ப செயலாற்றுபவர்கள் அரசியலில் காலூன்றுகின்றனர் ஏனையவர்கள் காலாவதியாகின்றனர். இந்த அரசியல் யதார்த்தத்தை நமது அரசியல் தரப்புகள் புரிந்து கொள்ளவில்லை. இந்திய இலங்கை ஒப்பந்தத்தை தாண்டிச் செல்ல வேண்டும் என்னும் கோரிக்கைகள் கடந்த முப்பத்தேழு ஆண்டுகளாக முன் வைக்கப்படுகின்றன.

ஆனால் தாண்டிச் செல்லும் வழியை அறியவும் முடியவில்லை. ஆகக்குறைந்தது அதற்கான சிறிய கதவைக்கூட திறக்க முடியவில்லை. இந்த நிலையில் இந்தியாவின் 13ஆம் திருத்தம் தொடர்பான கோரிக்கை அன்றுபோல் இப்போதும் புதிது போன்றே தெரிகின்றது. ஏனெனில் வேறு தெரிவுகள் எதனையும் தமிழர்களால் முன்வைக்க முடியவில்லை ஏன்? அதற்கான அரசியல் பலம் தமிழர்களிடம் இல்லை. இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ஜே. வி. பி. கடுமையாக எதிர்த்திருந்தது. அது ஏனென்று கேட்டால் அது வேறு அரசியல் சூழல் அன்றைய உலக ஒழுங்கு வேறு. ஆனால் அதனைக் கொண்டு இப்போது நாம் சிந்திக்க முடியாது என்பது தான் அனுரவின் பதிலாகும்.

அரசியல் ரீதியில் அனுரவின பதில் சரியானது நேர்மையானது. எனவே அனுர மாறியிருக்கின்றார் என்பது உண்மை. ஆனால் இலங்கைத் தீவின் சிங்கள மேலாதிக்க மனோபாவத்துக்குள் அவரால் மாற முடிந்திருக்கின்றதா என்பதுதான் கேள்வி.

ஏனெனில் இன்று அனுரவின் ஆதரவாளர்கள் அனைவருமே நேற்று கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரித்து மகிழ்ந்தவர்கள். கோட்டாவின் வெற்றிக்காக வெடி கொழுத்தியவர்கள். இந்த மனோநிலையுள்ள மக்களால் ஆதரிக்கப்படும் அனுரகுமார திசநாயக்கவால் அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த முடிந்தால் அது நல்லதுதான். ஆனால் அது முடியுமா என்பதுதான் கேள்வி. சிங்கள மேலாதிக்க மனோநிலைக்குள் அதிகாரத்தை கைப்பற்றி ஒருவர் அந்த மனோநிலையுடன் மோதி வெல்ல முடியுமானால் அனுரவால் மாற்றங்களை ஏற்படுத்த முடியும். இல்லாவிட்டால்...?

# மகிந்தாவின் மகன் யோஷிதவிடம் இரகசிய ஆயுதங்கள் ஏன்?



மகிந்த ராஜபக்சவின் அரசாங்கத்தின் காலப்பகுதியில் அவரது மகன் யோஷித ராஜபக்ச, 'எவன்ட் கார்ட்' உரிமையாளர் நிஷ்ஷங்க சேனாதிபதி, முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 1500 பேருக்கு 1690 துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அதன்படி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு 8 துப்பாக்கிகளும், நிஷ்ஷங்க சேனாதிபதிக்கு 9 துப்பாக்கிகளும், யோஷித ராஜபக்சவுக்கும் 7 துப்பாக்கிகளும் வழங்கப்பட்டுள்ளன.

அவற்றின் மொத்த எண்ணிக்கை 24 ஆகும். அஅ9 ரக 16 துப்பாக்கிகளும் அதில் உள்ளடங்குகின்றன. இந்த துப்பாக்கிகளை விரைவில் பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிகளை நவம்பர் மாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் மீள வழங்கவில்லையெனில் 1916 ஆண்டு 33 இலக்க துப்பாக்கி கட்டளை சட்டத்திற்கமைய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. துப்பாக்கிகளுக்கு சொந்தமான ரவைகளை கடற்படைக்குச் சொந்தமான வெலிசரையில் அமைந்துள்ள களஞ்சியசாலைக்கு குறித்த தினத்திற்கு முன்னர் வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது. கடந்த அரசாங்கத்தினால் துப்பாக்கிகள் வழங்கப்பட்டவர் களில் முன்னாள் ஜனாதிபதியின் புதல்வர் யோஷித ராஜபக்ஷவும் ஒருவர்.

அவருக்கு வழங்கப்பட்ட துப்பாக்கிகளின் எண்ணிக்கை 7 ஆகும்.

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
32வது ஆண்டு விழா
சங்கீத சங்கமம் 2025
விபரங்களுக்கு
ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# வெளிப்புற பொறிமுறையை திணிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது! மனித உரிமை பேரவைத் தீர்மானத்தை நிராகரித்தது அநுர அரசு!

எந்தவொரு இறையாண்மையுள்ள அரசாலும் அதன் அரசமைப்பிற்கு முரணான மற்றும் அதன் உள்நாட்டு சட்ட செயல்முறைகளின் அர்ப்பணிப்பை முன்கூட்டியே தீர்மானிக்கும் வெளிப்புற பொறிமுறையை கட்டாயமாக திணிக்க முயல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது என இலங்கை தெரிவித்துள்ளது.



ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் சமர்ப்பித்த அறிக்கையில் இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி இதனை தெரிவித்துள்ளார் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது

குறிப்பிட்ட தீர்மானத்தின் 57–.1 நகல் வடிவம் ஐக்கிய நாடுகள் தீர்மானத்தின் மூலம் வழங்கப்பட்ட ஆணையை மேலும் நீடிக்கின்றது. மனித உரிமை ஆணைக்குழுவின் தீர்மானத்தையும் 51–1அதற்கு முந்தைய தீர்மானத்தையும் 46–1 இலங்கை நிராகரித்துள்ளது இந்த தீர்மானத்தின் மூலமே ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்திற்குள் ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறை ஏற்படுத்தப்பட்டது.

நாங்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையிலிருந்து எங்களை விலக்கிக் கொள்கின்றோம்– அதற்கான காரணங்களை ஏற்கனவே சமர்ப்பித்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளோம்.

தொடர்புபட்ட நாடு என்ற அடிப்படையில் இலங்கையின் சம்மதம் இன்றியே 51–1 தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டது.வாக்கெடுப்பின் போது உலக நாடுகள் அந்த தீர்மானம் குறித்து பிளவுபட்டிருப்பது வெளிப்பட்டது.

இதன் காரணமாக அந்த 51–1 தீர்மானத்தின் மூலம் வழங்கப்பட்ட ஆணையை மேலும் நீடிக்கும் தீர்மானம் மனித உரிமை பேரவையின் பொது உடன்பாடு அற்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்திற்குள் ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறையை ஏற்படுத்துவது முன்னர் ஒருபோதும் இடம்பெறாத விடயம்.

எந்தவொரு இறையாண்மையுள்ள அரசாலும் அதன் அரசமைப்பிற்கு முரணான மற்றும் அதன் உள்நாட்டு சட்ட செயல்முறைகளின் அர்ப்பணிப்பை முன்கூட்டியே தீர்மானிக்கும் வெளிப்புற பொறிமுறையை கட்டாயமாக திணிக்க முயல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது.

### வாக்கெடுப்பின்றி நிறைவேற்றம்

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கான வரைவு தீர்மானம் வாக்கெடுப்பின்றி ஐ. நா.மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டது இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கான A/HRC/57/L.1 தீர்மான வரைவு வாக்கெடுப்பின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இது ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 57வது கூட்டத்தொடரில் குறித்த தீர்மான வரைவு நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### அமெரிக்கா தெரிவிப்பது என்ன?



ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை இலங்கையின் நல்லிணக்கம் தொடர்பான பொறுப்புக்கூறல் திட்டத்தினை தொடர்வதற்கு தீர்மானித்துள்ளது என ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கான அமெரிக்காவின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி மிச்செலே டெய்லர் தெரிவித்துள்ளார்

சமூக ஊடக பதிவில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் முக்கிய பணிகளையும் இலங்கையின் நல்லிணக்கம் தொடர்பான பொறுப்புக்கூறல் திட்டம் மற்றும் பொறுப்புக்கூறல் மற்றும் பொருளாதார நெருக்கடியின் தாக்கங்கள் ஊழல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான திட்டங்களையும் தொடர்வதற்கு தீர்மானித்தது. இந்த முக்கியமான விவகாரங்கள் குறித்து தொடர்ந்தும் ஈடுபாட்டை பேணுவதற்கு அமெரிக்கா எதிர்பார்த்துள்ளது.

இது இவ்வாறிருக்க அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்க இராணுவத் தளபதி ஒருவர் ஒக்டோபர் 10ஆம் திகதி இலங்கைக்கு வருகிறார். நாங்கள் கடற்படைக்கு தேவையான உபகரணங்களை அமெரிக்காவிலிருந்து பெறுகிறோம் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை அமெரிக்கா சிறிலங்கா கடற்படையின் கடல் கண்காணிப்பிற்காக புத்தம் புதிய விமானத்தை அன்பளிப்பாக வழங்கவுள்ளது என்றார்.

In Person & Online Classes
(In Person Classes are available in Brampton)
Math & Physics Tutoring
(For High School Students)

Math: Grade 9, 10, 11, & 12 (Advanced Functions, Calculus & Vectors and Data Management) Physics: Grade 11 & 12
Special Classes for IB, AP & University Students
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை
Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி. இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுடன் கூட்டு காலையில் தமிழரசுக்கட்சியில் விண்ணப்பம் மாலையில் "சங்கு"டன் சங்கமம் சசிகலா

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட பெண் வேட்பாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ரவிராஜின் பாரியார் திருமதி சசிகலா ரவிராஜ் வேட்புமனுவில் 07 செப் 2024 திங்கட்கிழமை கையெழுத்திட்டுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினரான சசிகலா கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டு தோல்வியடைந்திருந்தார்.

அந்தத் தேர்தலில் தமிழரசுக் கட்சியே தனக்கு எதிராகச் சதி செய்தது என்று சசிகலா குற்றஞ் சாட்டியிருந்த நிலையில், கட்சி மீது கடந்த காலங்களில் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தி வந்திருந்தார்.

இவ்வாறான நிலையில் இம்முறை நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சியில் போட்டியிடுவதற்கு அவர் விண்ணப்பித்திருந்தார். ஆனால், தமிழரசுக் கட்சியில் அவருக்கு வேட்பாளர் நியமனம் வழங்கப்படவில்லை.



தமிழரசுக் கட்சியின் இந்த வேட்பாளர் தெரிவில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அடாவடித்தனமாகப் பல்வேறு குளறுபடிகளைச் செய்து தனக்கு வேண்டியவர்களுக்கு நியமனத்தைக் கொடுத்துள்ளார் என்று சசிகலா குற்றஞ் சாட்டியிருந்தார்.

இந்நிலையில் தமிழரசுக் கட்சியில் இருந்து காலை வெளியேறிய சசிகலா மாலை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சின்னமான சங்குச் சின்னத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவில் பிற்பகல் கையெழுத்திட்டுள்ளார்.

கடந்த மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்காவை ஆதரித்த சசிகலா பதவிக்காக எப்படி எல்லாம் அலைக்கழிந்து திரிகின்றார் என்பதை யாழ்.மாவட்ட வாக்காளர்கள் விளங்கிக் கொள்ள மாட்டார்களா என்ற கேள்வியை யாழ்.மாவட்ட பொதுஜனம் திருப்பி நம்மிடம் வினாவினார்.

இதேவேளை தேர்தலில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான செயன்முறையொன்று நியமனக்குழுவினால் வகுக்கப்பட்டு, அதற்கு அமைவாகவே வேட்பாளர் தெரிவு இடம் பெற்றது. சுமந்திரன் நினைத்தவாறு எதுவுமே நடைபெறவில்லை. எனவே இவ்வாறானதொரு பின்னணியில் சிலர் ஏன் தெரிவு செய்யப்படவில்லை என்பதற்குத் தனித்தனியாகக் காரணம் கூறுவது சாத்தியமற்றதாகும் என பொதுச் செயலாளர் மருத்துவர் சத்திலிங்கம் தெரிவித்துள்ளார்.

# கழிவறையில் உளவு வேலை பார்த்த இஸ்ரேல் பிரதமர் அம்பலப்படுத்திய முன்னாள் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர்



இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது கழிவறையைப் பயன்படுத்திய பிறகு, ஒட்டுக் கேட்கும் கருவி ஒன்றை கண்டு பிடித்தாக முன்னால் பிரித்தானிய பிரதமர் போரிஸ் ஜோன்சன் அம்பலப்படுத்தியுள்ளார். கடந்த 2017ல் இரு தலைவர்களின் சந்திப்பு நடந்த நிலையிலேயே கழிவறையில் இருந்து ஒட்டுக் கேட்கும் கருவி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அக்டோபர் 10ம் திகதி வெளியாகவிருக்கும் தமது நினைவுக் குறிப்புகள் நூலில், போரிஸ் ஜோன்சன் இந்த விவகாரம் குறித்து முதல் முறையாக அம்பலப்படுத்தியுள்ளார்.

ஜோன்சன் பிரித்தானியாவின் வெளிவிவகார அமைச்சராக பணியாற்றிய போது, பிரித்தானிய வெளிவிவகார அமைச்சகத்தில் இந்த சம்பவம் நடந்துள்ளது.

இரு தலைவர்களும் இடையே சந்திப்பு முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் திடீரென்று கழிவறையை பயன்படுத்த சென்றுள்ளார் பெஞ்சமின் நெதன்யாகு.

இதன் பின்னரே கழிவறையில் இருந்து ஒட்டுக் கேட்கும் கருவி கண்டு பிடிக்கப்பட்டதாக ஜோன்சன் குறிப்பிட்டுள்ளார். இதே காலகட்டத்தில் தான் அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் ஒட்டுக் கேட்கும் கருவிகளை இஸ்ரேல் பொருத்தியுள்ளதாக புகார் எழுந்தது குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேலுக்கு எதிராகக் கிளம்பிய பிரான்ஸ் அதிபர்! கடுமையான பதிலடி கொடுத்த இஸ்ரேலியப் பிரதமர்

காசா லெபனான் மீதான தாக்குதல்களை நடத்திவரும் இஸ்ரேலை பிரான்ஸ் அதிபர் மக்ரோன் கண்டித்தார். பிரெஞ்சு ஒளிபரப்பாளரான பிரான்ஸ் இண்டரிடமே மக்ரோன் இக்கருத்தை வெளியிட்டார்.

இஸ்ரேலுக்கு ஆயுத விநியோகத்தை நிறுத்துமாறு பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் அழைப்பு விடுத்துள்ளார்.





லெபனானில் தரைவழித் தாக்குதலைத் தொடங்க இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் நடவடிக்கையையும் அவர் விமர்சித்தார். போரின் விரிவாக்கத்தைத் தவிர்ப்பது முன்னுரிமை என்று கூறினார். லெபனான் ஒரு புதிய காஸாவாக மாற முடியாது என்று அவர் மேலும் கூறினார். போர் நிறுத்தத்திற்கு மீண்டும் மீண்டும் அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் காஸாவில் தொடர்ந்து வரும் மோதல்கள் குறித்து பிரெஞ்சு ஜனாதிபதி தனது கவலையை மீண்டும் வலியுறுத்தினார். இது இஸ்ரேலின் பாதுகாப்பு உட்பட ஒரு தவறு என்று நான் நினைக்கிறேன் என்று அவர் கூறினார். இந்த மோதல் 'வெறுப்புக்கு' இட்டுச் செல்கிறது என்றார். மக்ரோனின் கருத்துக்கள் நெதன்யாகுவிடம் இருந்து கடுமையான எதிர்கொண்டார். ஈரான் தலைமையிலான காட்டுமிராண்டித்தனத்தின் சக்திகளுக்கு எதிராக இஸ்ரேல் போரிடுகையில், அனைத்து நாகரிக நாடுகளும் இஸ்ரேலின் பக்கம் உறுதியாக நிற்க வேண்டும் என்று நெதன்யாகு தனது அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## சிவில் சமூகங்களின் அரசியல் பங்களிப்பு!

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் முயற்சியில் சிவில் சமூக அமைப்புகள் ஈடுபட்டிருந்தன. இந்த முயற்சியில் ஏராளமானவர்கள் தன்னிச்சையாகவும் ஈடுபட்டனர். இதன்விளைவாக பொது வேட்பாளர் நிலைப்பாடு ஓரளவு வெற்றியையும் பெற்றது. ஆரம்பத்தில் இந்த முயற்சி பெருமளவில் எடுபடாது என்னும் நிலையில் நோக்கப்பட்டாலும் கூட பின்னர் குறிப்பிடத்தக்களவு கவனத்தைப் பெற்றது.

இந்தப் பின்புலத்தில் சிவில் சமூக அமைப்புகளும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து பயணிப்பதற்கான வாய்ப்பு உருவாகியது. ஏழு கட்சிகளும் தமிழ் மக்கள் பொதுச் சபையும் ஒன்றிணைந்து தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பாக வடிவம் பெற்றது. ஆனால், தற்போது அது தொடருமா அல்லது உடையுமா என்னும் கேள்வி எழுந்திருக்கின்றது. சிவில் சமூகம் தொடர்பில் தமிழ்ச் சூழலில் குழப்பகரமான கருத்துகள் உண்டு. சிவில் சமூகம் என்னும் சொற்பதத்தை பலரும் பலவிதங்களில் பயன்படுத்துகின்றனர். அரசுசாரா நிறுவனங்களும் சிவில் சமூகமாக தங்களை அடையாளப்படுத்துகின்றன. அரசுசாரா நிறுவனங்கள் நிதிசார் முகவரமைப்புகளில் தங்கியிருப்பவை. அவை அரசியலில் ஈடுபடுவதற்கான வரையறைகள் உள்ளன. அந்த வரையறைகளை தாண்டினால் அவற்றுக்கான நிதி மூலங்கள் தடைப்பட்டுவிடும்.

தமிழ் மக்கள் பொதுச் சபையில் அவ்வாறான அமைப்புகளும் உண்டு. அவை தமிழ்த் தேசியக் பொதுக் கட்டமைப்பு ஒரு சிவில் சமூக அரசியல் கூட்டாகத் தொடர்வதைத் தடுக்க முயற்சிக்கின்றன குழப்பவும் முயற்சிக்கின்றன. இந்தப் பின்புலத்தில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் எதிர்காலம் கேள்விக்கு உள்ளாகியிருக்கின்றது. தேர்தல் நெருங்கிவரும் நிலையில் இவ்வாறான தடுமாற்றங்கள் குழப்பங்கள் வாக்குகள் பிரியவும் தமிழ்த் தேசியக் கட்சிகளை பிரிக்கவுமே பயன்படும். இவ்வாறான தவறை தமிழ் மக்கள் பொதுச்சபை செய்யக் கூடாது. தமிழ் மக்கள் பொதுச்சபை அவசரத்தில் உருவாகிய ஓர் அமைப்பு. நீண்ட அரசியல் உரையாடல்களின் வழியாக உருவாகிய அமைப்பு அல்ல. தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நோக்கி வாக்குகளை திரட்டுவதற்காக பயன்படுத்தப்பட்ட ஓர் அமைப்பு. தேவை கருதி பலர் அதற்குள் உள்வாங்கப்பட்டனர்.

இவ்வாறு உள்வாங்கப்பட்டவர்கள் சிலர் தற்போது தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பை பலவீனப்படுத்துவதற்கான விஷச்செடிகளாகவும் மாறியிருக்கின்றனர். இதற்கு ஏனையவர்களும் பலியானால் தமிழ் மக்கள் பொதுச்சபை என்னும் பெயரில் தமிழ்த் தேசிய அரசியல் மேலும் சிதைக்கப்படும் ஆபத்தே நேரிடும். தேசத்தைத் திரட்டுவதற்காக நிறுத்தப்பட்ட பொதுவேட்பாளர் என்னும் நிலைப்பாடு இறுதியில் ஒன்றுபட்ட கட்சிகளைக் கூட, ஒன்றுபடுத்தி வைத்திருக்க முடியாத கையறு நிலைக்குள் சென்றிருக்கின்றது. சிறிய விவகாரம் அரசியல் உரையாடல்களில் எட்டிப்பார்க்கின்றது.

சங்கு சின்னத்தை கட்சியொன்று பயன்படுத்துவதைத் தடுக்க முடியாது. அடிப்படையில் அது ஒரு சுயேச்சை சின்னமாகவே பயன்படுத்தப்பட்டது. அதனை கட்சியொன்று சட்டரீதியில் பெற்றிருக்கின்றது. இன்னொருவர் விண்ணப்பித்திருந்தால் குலுக்கல் முறையில்தான் அது தெரிவு செய்யப்பட்டிருக்கும். 'சங்கு' சின்னம் முன்னர் ஹெல உறுமயவின் சின்னமாகவே இருந்தது. இப்போது அது ஒரு பிரச்சனையில்லை. தமிழ் மக்கள் பொதுச் சபையானது பாராளுமன்றத் தேர்தலில் ஒரு பொதுக் கட்டமைப்பாக எவ்வாறு செயல்படப்போகின்றது? இந்தக் கேள்விக்கான பதில் இல்லாது விட்டால் பொதுச் சபை ஒரு தோல்வியடைந்த செயல்பாடாகவே பதிவாகும்.

# தமிழரசுக்கட்சியில் இருந்து மாவை. சேனாதிராஜா விலகுவதாகச் செய்திகள்! உத்தியோகபூர்வ விலகல் கடிதம் கிடைக்கவில்லை என்கிறார் செயலாளர்!



எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழரசுக்கட்சி சார்பில் யாழ் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களின் பெயர் பட்டியல் வார முதல் நாளில் வெளியிடப்பட்ட நிலையில் அது குறித்து கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலரும் அதிருப்தியடைந்திருந்த பின்னணியில் தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா கடந்த 07 ஒக்டோபர் 2024 திங்கட்கிழமை கட்சியிலிருந்து விலகினார்.

எதிர் வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் யாழ் தேர்தல் மாவட்டத்தின் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களின் பெயர்கள் அக்கட்சியின் தேர்தல் நியமனக்குழுவினால் 06 ஒக் 2024 ஞாயிற்றுக்கிழமை அறிவிக்கப்பட்டது.

அதன்படி யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான வேட்பாளர்களாக எஸ்.சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன், எஸ்.சி.சி.இளங்கோவன், கேசவன் சயந்தன், சந்திரலிங்கம் சுகிர்தன், சுரேக்கா சசீந்திரன், இம்மானுவல் ஆர்னோல்ட், கிருஸ்ணவேணி சிறிதரன், தியாகராயா பிரகாஷ் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர். இருப்பினும் அப்பெயர் பட்டியலில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களின் பெயர்கள் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை. இதனையடுத்து கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தமிழரசுக்கட்சியிலிருந்து விலகுவதாக ஞாயிற்றுக்கிழமை அறிவித்தார்.

அவர் மாத்திரமன்றி கட்சியின் மேலும் சில சிரேஷ்ட உறுப்பினர்களும் இவ் வேட்பாளர் பட்டியல் தொடர்பில் கடும் அதிருப்தியடைந்திருந்த நிலையில், தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா திங்கட்கிழமை கட்சியிலிருந்து விலகினார்.

அதற்கமைய மாவை சேனாதிராஜா தமிழரசுக்கட்சியிலிருந்து விலகுவதாக அறிவிக்கும் கடிதத்தை கட்சியின் பொதுச்செயலாளர் பா.சத்தியலிங்கத்துக்கு அனுப்பி வைத்திருப்பதாக அவரது தரப்பினர் உறுதிப்படுத்தினர்.

ஆனால் பொதுச்செயலாளர் சத்தியலிங்கத்தைத் தொடர்பு கொண்டு அக்கடிதத்தின் உள்ளடக்கம் குறித்து வினவியபோது, மாவை சேனாதிராஜா கட்சியிலிருந்து விலகி விட்டாரா என ஊடகவியலாளர்கள் தொடர்பு கொண்டு கேட்டபோது தான் தானும் அறிந்து கொண்டதாகவும், இருப்பினும் அது குறித்த உத்தியோகபூர்வ கடிதம் எதுவும் தனக்குக் கிடைக்கப்பெறவில்லை எனவும் பதிலளித்தார்.

அதேவேளை எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழரசுக்கட்சி சார்பில் யாழ் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களின் பெயர் பட்டியலில், மக்கள் மத்தியில் செல்வாக்குடைய சிரேஷ்ட உறுப்பினர்களின் பெயர்கள் ஏன் உள்வாங்கப்படவில்லை என்றும், அதற்குரிய நியாயமான காரணங்கள் என்ன என்றும் மருத்துவர் சத்தியலிங்கத்திடம் வினவியபோது,

அதற்கு அவர் பின்வருமாறு பதிலளித்தார்: இந்தத் தீர்மானம் கட்சியின் தேர்தல் நியமனக்குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானமாகும். தேர்தலில் போட்டியிடுவதற்கு விருப்பம் தெரிவித்து அதிக எண்ணிக்கையான விண்ணப்பங்கள் வரும்போது, அவற்றை ஆராய்ந்து அதில் பொருத்தமான விண்ணப்பங்களை மாத்திரம் தெரிவு செய்யவேண்டிய கட்டாயம் ஏற்படும். எனவே இம்முறை தேர்தலில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான செயன்முறையொன்று நியமனக்குழுவினால் வகுக்கப்பட்டு, அதற்கு அமைவாகவே வேட்பாளர் தெரிவு இடம்பெற்றது.

இவ்வாறானதொரு பின்னணி யில் சிலர் ஏன் தெரிவு செய்யப்பட வில்லை என்பதற்குத் தனித்தனியாகக் காரணம் கூறுவது சாத்தியமற்றதாகும்' என்றார்.

## 31ம்நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்
09.01.1964



ஆண்டவன் அடியில்
08.09.2024

### அமரர் உயர்திரு வாசுதேவன் துரைராஜா

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு வாசுதேவன் துரைராஜா அவர்களின் 31ம்நாள் நினைவு நாள் 08 ஒக்டோபர் 2024 செவ்வாய்க்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது நினைவாக கனடாவில் வாழும் திரு சுதாகர் குடும்பமும் திரு சாந்தகுமார் குடும்பமும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு வாசுதேவன் துரைராஜா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அனைவருடனும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre
309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224, Cell: 416.450.5011
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# கண்மூடித்தனமான விசுவாசமும் கவனிக்கப்பட வேண்டியதும்!

– றியாஸ் குரானர் –

அரசியல் என்பது, அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான ஒரு போராட்டம். அதற்காக அனைத்து தந்திரோபாய வழிமுறைகள், மரபான நடவடிக்கைகள், சதித் திட்டங்கள், பொய்கள், வாக்குறுதிகள் என அனைத்தையும் தேவையான அளவில் தேவையான நேரத்தில் பயன்படுத்தும் ஒரு செயல் முறையைக் கொண்டது என்பதை அநேக நேரங்களில் மக்கள் மறந்தே விடுகின்றனர்.

மக்கள் தங்களுக்கான நல்வாழ்வுக்காகவே இந்த கட்சிகளும் அரசியல்வாதிகளும் களத்தில் இறங்கி போராடுகிறார்கள் என நம்புகின்றனர். மக்களுக்கான நலன் என்பது, இந்த அதிகாரத்திற்கான காய் நகர்த்துதலில் ஒரு ஓரத்தில் வைக்கப்படுகின்றனவே ஒழிய, அதுவே மையப் பொருளாக இருப்பதில்லை.

மக்களை அதிகம் எந்தத் தரப்பினர் நம்பச் செய்கிறார்களோ அவர்கள் அதிகாரத்தை பெறுவதற்கான வாய்ப்பை கொண்டிருக்கின்றனர். மக்களை நம்பச் செய்வதற்கு, தங்களால் சாத்தியமே இல்லை என்று அவர்களுக்குத் தெரிகின்ற ஆனால், மக்கள் கிளர்ச்சியும் மகிழ்ச்சியும் கொள்ளும் அனைத்து வாக்குறுதிகளையும் அள்ளி வழங்குவது இயல்பே. அந்த வாக்குறுதிகளில் கணிசமான பகுதியை செயல்படுத்தி விட்டு, மீதியை செயல்படுத்த இன்னும் காலத்தை நீட்டிக் கேட்கின்ற தந்திரோபாய நடவடிக்கைக்கு இந்த அரசியல் முகாம்கள் தாவி விடுகின்றன. தமது இயலாமையை மறைத்துக் கொள்வதற்காக மக்களின் ஆதரவு போதவில்லை என்ற காரணத்தையும் முன்வைத்து விடுகின்றனர். எங்களுக்கு மேலும் அதிகாரத்தை வழங்குங்கள் நாங்கள் அனைத்து வாக்குறுதிகளையும் தீர்த்து விடுவோம் என மக்களின் மீதே அனைத்துப் பாரங்களையும் சுமத்தி விடுகின்றனர். இதுவே தொடர்ச்சியாக நடைபெறக்கூடியது. நடைபெற வாய்ப்பும் உள்ளது.

தோழர் அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான புதிய அரசு, மாற்றம் குறித்த நம்பிக்கையை மக்களுக்கு வழங்கியது. அதை இலங்கை மக்களில் 42 வீதமானவர்களை நம்பச் செய்து அதிகாரத்தையும் கைப்பற்றியிருக்கின்றனர். இது முழுமையான அதிகாரமல்ல என்பதை அவர்களும் மக்களும் அறிவர். எனவே தான், பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று 113 என்ற மாய இலக்கத்தையேனும் பெற வேண்டும் என்ற தேவை புதிய அரசுக்கு உண்டு. ஏற்கனவே,

ஜனாதிபதி தேர்தலின் போது தங்களால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளும், மாற்றம் குறித்த நம்பிக்கைகளும் 50 வீதத்திற்கும் அதிகமான மக்களை நம்பச் செய்யும்படி இல்லை என்பதனால், இந்தப் பாராளுமன்ற தேர்தலில் மேலும் பல வாக்குறுதிகள் வழங்கப்படலாம். ஆனால், மாற்றம் குறித்து பேசிய என்பிபி என்ன வகையான மாற்றம் என்பதை வெளிப்படையாக முன்வைக்கவில்லை.

ஆனால், அரச இயந்திரம் தொடர்பிலான சீர்திருத்தங்கள் பற்றி வெகுவாக பிரச்சாரம் செய்தன. சீர் திருத்தம் என்பது, ஏற்கனவே இருக்கும் அரச இயந்திரத்தினதும், அதன் செயல் முறையினதும் இயக்கத்தை ஊழல், லஞ்சம், சலுகைகள் போற்றவற்றை நீக்குவதினூடாக ஒரு ஒழுங்கு முறைக்குள் கொண்டு வருவது என்பதே ஆகும். நமது எளிமையான உவமையில் கூறுவதானால், பழைய வாகனத்தை டிங்கரிங் செய்வதோடு சேவிஸ் செய்து ஓடச் செய்வதாகும். முற்றிலும் புதிய மாற்றமான ஒரு வாகனத்தை கொண்டு வருவதல்ல.

ஆக, மாற்றம் என்பதை அடித்தளத்தில் நிகழ்த்துவதாக அவர்கள் கூறவில்லை என்பதை அறிய முடியும். இருப்பதை சரி செய்வது, ஆனால், அதையே 'மாற்றம்'' என்ற தவறான கருத்துரைப்பாலும் அதைப் பிரச்சாரம் செய்வதினூடாகவும் மக்களை நம்பச் செய்யும் தந்திரோபாயம் என்பிபிக்கு கைகூடிவந்திருக்கிறது. அந்த நம்பிக்கை நீடிக்குமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.



அதற்கான பிரதான காரணம் கடந்த காலங்களில் இருந்த ஆட்சியாளர்களின் கவனயீனமான போக்குகளே ஆதாரமாக அமைந்திருக்கிறது.

குறைந்த பட்சமான இந்த சீர்திருத்தங்கள் அனைத்தும், பாராளுமன்றத்தையும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் எல்லையற்ற சலுகைகளையும் மையப்படுத்தியே என்பிபி கவனத்திற் கொண்டது. அதுவே கடுமையான பிரச்சாரங்களாக மேலெழுந்தன. ஊழல், லஞ்சம், சலுகைகள் என்பன பாராளுமன்றத்தையும் எல்லையற்ற அதிகாரத்தையும் கொண்ட ஜனாதிபதியையும் சுற்றி மட்டுமே அமைந்திருக்கவில்லை.

இராணுவம், பொலிஸ், அரசுக்கு நிதி வழங்கும் முதலாளித்துவ நிறுவனங்கள், என அனைத்து அரச இயந்திரங்களிலும் மலிந்து கிடக்கின்றன. அவை குறித்த எந்த தகவல்களையும் ஊழல் லஞ்சம் சலுகைகள் பற்றிய பைல்கள் எவற்றையும் பிரதானமான பிரச்சாரங்களாக என்பிபி கையிலெடுத்துக் கொள்ளவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும். சீர் திருத்தம் என்பதும் கூட, தங்கள் அதிகாரத்தை பெறுவதற்கு தேவையான பகுதிகளை, தங்களுக்கு போட்டியான தளங்களில் மட்டுமே அக்கறை கொண்டிருக்கின்றனர் என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

எனவே, இது முழுமையான சீர் திருத்தம் என்ற எண்ணப்பாட்டையும் கொண்டதல்ல. அதிகாரத்தை தமதாக்கிக் கொள்வதற்குத் தேவையானதும், மக்களை நம்பச் செய்வதற்கு போதுமான எல்லைகளுக்குள் மட்டுப்படுத்திக் கொண்டதையும் ஆழமாக கவனிக்க வேண்டும். எனவே, இது மாற்றத்திற்கான புதிய ஆட்சியுமல்ல. அதே நேரம், முழுமையான சீர்திருத்தம் பற்றிய விழிப்புணர்வுமல்ல. அதற்காக இப்படி நடப்பதை அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான தந்திரோபாய நடவடிக்கை என்ற அளவிலிருந்தே புரிந்து கொள்ள வேண்டுமே ஒழிய, புதிய மாற்றம் என அதீதமாக நம்பும் மனநிலையிலிருந்து விடுபட்டு சிந்திக்க வேண்டும் என்பதையே இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முக்கியமான விசயம், இந்தியா உடனடியாக இலங்கை வந்து பல விசயங்கள் பேசியிருந்தாலும், 13 வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பில் அழுத்தமான நிலைப்பாட்டை பதிவு செய்திருக்கிறது. இது எங்கள் உள்நாட்டுப் பிரச்சினை அதை நாங்களே பார்த்துக் கொள்கிறோம் என சொல்லும் துணிச்சல் புதிய அரசிடமும் இல்லை. உங்கள் நாடாக இருந்த போதும், எங்களால் கையாளக்கூடிய ஒரு விசயம் உங்கள் நாட்டில் எங்களுக்கிருக்கிறது என்பதை மேலும் அழுத்தமாக பதிவு செய்திருக்கிறது இந்தியா.

அதேநேரம், 58 வீதமாக இருக்கும் மாற்றத்தை நம்பிக்கை கொள்ளாத தரப்பினர் அனைவரையும் சந்தித்திருக்கிறது. புதிய அரசிடமே வெளிப்படையாக தமது நிலைப்பாட்டை சொன்ன இந்தியா, தென்னிலங்கை மற்றும் வட கிழக்கு கட்சிகள் அனைத்தையும் புதிய அரசுக்கான அழுத்தச் சக்தியாக பராமரிக்க நட்புக்கரத்தை அவர்களிடமும் நீட்டியிருக்கிறது.

சாதாரணமாக பார்க்கும் என்பிபியின் ஆதரவாளர்களுக்கு இந்தச் செயற்பாடுகள் மாற்றத்துக்கு எதிரான கூட்டுச் சதி போல தோன்றக் கூடும். அரசியல் விளையாட்டு இது. எப்படி புதிய அரசு தமக்கு ஆதரவாக மக்களை ஒன்றிணைப்பதற்கு வாக்குறுதிகளை வழங்குகிறதோ அதே போன்று தான். பிறதொரு முகாம் தமக்கு ஆதரவான சூழலை இலங்கையில் ஏற்படுத்துவதற்கான அரசியல் விளையாட்டுக்களில் இதுவும் அடங்கும்.

இலங்கையில் அரசமைக்கக் கூடியதாக கருதப்படும் தென்னிலங்கைக் கட்சிகள் எப்போதும் பன்மைத்துவத்தை ஏற்றுக் கொண்டவையல்ல. ஒரே நாடு, அந்த நாட்டுக்குட்பட்டவர்கள் குறித்த அரசுக்கும் கட்டுப்பட்டவர்கள். ஆயினும் பெரும்பான்மை மக்களின் விருப்பங்களுக்கு அடிபணிந்து நடந்து கொள்ள வேண்டும் என்ற அடித்தளத்திலிருந்து சிந்திப்பவை. நடந்து கொள்பவை.

இந்தக் கோஷங்களில் மாற்றங்கள் இல்லாமலேயே வித்தியாசங்களோடு கூடிய சமூகங்களை தமது பிடிக்குள் வைத்திருக்க முயன்றன. வலையை வீசி பிடித்துக்கொள்ள முயன்றன. அதில் கணிசமான அளவு மக்களையும் பிடித்துக் கொண்டன. ஏற்கனவே இருந்த அனைத்துக் கட்சிகளும் செய்த பணிதான் இது. ஆயினும், பிற சமூகங்கள் தங்கள் தனித்துவத்தை எப்போதும் விட்டுக் கொடுத்ததே இல்லை. பன்மைத்துவத்தை கைவிடக் கூடிய அனைத்து வரையறைகளையும் மீறியதே இல்லை. சில சலுகைகளுக்காகவும், அபிவிருத்திகளுக்காகவும் அமைச்சுப் பதவிகளுக்காகவும் பல சந்தர்பங்களில் அரசுகளோடு இணைந்து செயல்பட்ட போதும் தங்கள் தனித்துவத்தை முற்றாக இழந்து, அரசோடு சங்கமிக்கும் நிலைக்குச் சென்றதில்லை. தனித்துவம் என்பது சலுகைகளாக சமரசம் செய்யப்பட்ட போதிலும், வேண்டிய நேரம் இணையவும், வேண்டிய நேரம் பிரியவுமான சுதந்திரத்தை கைவிட்டதில்லை. இது ஒருவகை ஒப்பந்திற்கு சாத்தியமான வழிமுறையை கைவிட்டு அரசுசார்பான கட்சிகளின் நிலையான உறுப்பினர்களாக மாறிவிடவில்லை.

எதற்காக பிற சமூகங்கள் கட்சிகளை அமைத்து தமது தனித்துவங்களை மீள மீள வலியுறுத்துகின்றவோ அதற்கான தேவைகள் இன்றுமுள்ளன. அவை தீர்க்கப்படவுமில்லை. அதே நேரம், என்பிபிதான் உலகம் அழியும் வரை ஆட்சி செய்யும் என்றில்லை என்பதனால், என்பிபியினர் நல்லவர்கள், அனைத்து சமூகங்களையும் சமமாக பாவிக்கக் கூடியவர்கள் என்பதற்காக தங்கள் தனித்துவங்களை இழந்து அவர்களோடு, அவர்களின் வலையின் கண்ணிகளாக மாறிக் கொள்ள முடியாது.

அரசியல் யாப்பில் கூட குறைந்த பட்சம் பிற சமூகங்களுக்கான சட்டரீதியிலான இடம் கூட இன்னுமில்லை. அவர்களின் ஆட்சி முடிந்து பிறிதொரு ஆட்சி வரும்போது என்ன செய்வது? இந்தக் கேள்விக்கான பதிலே, பிற சமூகங்கள் தங்கள் தனித்துவங்களை இழக்காத ஆனால், பொதுவான நலன்களுக்கு ஆதரவு செய்வதும், பன்மைத்துவமும் தனித்துவமும் பாதிப்பிற்குட்படும் போது எதிர்க்கவுமான தனியான முகாம்கள் அவசியம். இதை புதிய ஜனாதிபதி கூட தமது பதவி ஏற்பு உரையில், அரசியல் தேவைகளுக்காக பன்முகத் தன்மையையும், அவசிமான தேர்வுகளையும் எடுக்கும் பிற சமூகங்களின் நிலைப்பாட்டை ஏற்பதாக கூறியிருப்பார்.

முஸ்லிம்களின் சமூக வெளியில், இந்த தனித்துவத்திற்கு எதிரான குரல்கள் மேலெழுந்திருக்கின்றன. அவை அதிகமாக புதிய இளைஞர்களினதும் மத தீவிரப் பற்றாளர்களின் பக்கத்திலிருந்தும் வருபவை அன்றி வேறில்லை. நபியும் சகாபாக்களும் போன்று ஒரு நம்பிக்கை சார்ந்த கருத்துக்களை பரப்புகின்றனர். எந்தக் கட்சியாக இருந்தாலும் அவை அரசியல் அதிகாரத்திற்கான போட்டியில் பங்கேற்கின்ற நிறுவனம் என்பதை மறந்து விடுகின்றனர். உணர்ச்சிவசப்பட்டு, இணைந்து கொள்கின்றனர். இலங்கையில் சீர் திருத்தங்களை முதன் முதலில் முன் வைத்த அமைப்புக்கள் அனைத்தும் மதப் பெருமையும், மதநம்பிக்கை போன்ற உணர்ச்சிசார்ந்த நிலைப்பாட்டிலுமே அடித்தளத்தை அமைத்துக் கொண்டன. அநாகரிக தர்மபால தொடக்கம் ஆறுமுக நாவலர் வரை இதை கவனிக்கலாம்.

ஊழல், லஞ்சம், சலுகை குறைப்பு போன்ற கோசங்கள் சீர்திருத்தம், புனிதப்படுத்தல், ஒழுக்கவாதம் போன்றவற்றோடு தொடர்புடையது. இந்த புனிதப்படுத்தலை பிரக்ஞையற்று ஏற்றுக் கொள்ளும் முஸ்லிம் தரப்பின் இளைஞர்களும், ஒழுக்கவாதத்தை அதிகம் தூக்கிப் பிடிக்கும் இயக்கவாதிகளும் எண்ணிக்கையளவில் கண்மூடித்தனமான நம்பிக்கையின் பால் ஈர்க்கப்பட்டு நிற்பதை பார்க்க முடிகிறது. (20ம் பக்கம் பார்க்க)

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.
தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா
செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)
பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)
உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)
உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)
பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்
இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

28 செப்டம்பர் 2024 - 04 ஒக்டோபர்2024 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 13வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 4வது ஆண்டு நினைவஞ்சலி

### திரு இரத்தினசிங்கம் மதியழகன்



புங்குடுதீவு 7ம்வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு இரத்தினசிங்கம் மதியழகன் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாள் 28 செப்டம்பர் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு இரத்தினசிங்கம் மதியழகன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## மஹாலய விரத உபயம்


### திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம்



மண்டைதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம் அவர்களதும் அவரது முன்னோர்களது நினைவாகவும் 02 ஒக்டோபர் 2024 புதன் கிழமை அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 12வது ஆண்டு நினைவஞ்சலி

### திரு தம்பையா நடராஜா



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு தம்பையா நடராஜா அவர்களின் 12வது ஆண்டு நினைவு நாள் 29 செப்டம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு தம்பையா நடராஜா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி பொன்னையா செல்லம்மா



இருபாலை கோப்பாயைச் சேர்ந்த திருமதி பொன்னையா செல்லம்மா அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 28 செப்டம்பர் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். கள் அன்றைய தினம் திருமதி பொன்னையா செல்லம்மா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி

### திரு பத்மநாதன் கனகராஜா



யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பத்மநாதன் கனகராஜா அவர்களின் பத்தாவது ஆண்டு நினைவு நாள் 05 ஒக்டோபர் 2024 சனிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு பத்மநாதன் கனகராஜா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 12வது, 24வது ஆண்டு நினைவஞ்சலி

### திரு செல்லர் மார்க்கண்டு
### திருமதி மனோன்மணி மார்க்கண்டு




யாழ்ப்பாணம் சித்தன்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்களான திரு செல்லர் மார்க்கண்டு அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளையும் திருமதி மனோன்மணி மார்க்கண்டு அவர்களது 24வது ஆண்டு நினைவு நாளையொட்டியும் 27 செப் 2024 வெள்ளிக்கிழமை அன்னாரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு செல்லர் மார்க்கண்டு, திருமதி மனோன்மணி மார்க்கண்டு இணையர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




28 செப்டம்பர் 2024 சனிக்கிழமை இருபாலை கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பொன்னையா செல்லம்மா அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




28 செப்டம்பர் 2024 சனிக்கிழமை புங்குடுதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு இரத்தினசிங்கம் மதியழகன் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




29 செப்டம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமை கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தம்பையா நடராஜா அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் சார்பாக திருமதி கனகம்மா நடராஜா அவர்கள் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




24 செப் 2024 செவ்வாய்க்கிழமை வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு சிவசுப்பிரமணியம் நாகலிங்கம் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக திரு சிவசுப்பிரமணியம் நாகலிங்கம் அவர்கள் 29 செப்டம்பர் 2024 அன்று பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்





30 செப்டம்பர் 2024 திங்கட்கிழமை தமது முன்னோர்களை நினைவு கூர்ந்து மஹாலய விரத உபயமாக புதுச்செம்மணி வீதியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு திருமதி சந்திரா சிவலோஜினி குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.





26. சப்டம்பர் 2024 வியாழக்கிழமை கனடாவில் வாழம் திருமதி டிலக்சினி நிறஞ்சன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக திருமதி டிலக்சினி நிறஞ்சன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து 30 செப்டம்பர் 2024 திங்கட்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்





02 ஒக்டோபர் 2024 புதன்கிழமை மண்டைதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சிவகுமாரன் சிவப்பிரகாசம் அவர்களையும் அவரது முன்னோர்களையும் நினைவு கூர்ந்து அன்னாரது குடும்பத்தினர் மஹாலய விரத உபயமாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




02 ஒக்டோபர் 2024 புதன்கிழமை ஊரேழ கிழக்கைச் சேர்ந்த திருமதி சிவபாக்கியவதி நல்லையா அவர்களது 54வது ஆண்டு நினைவு நாளாகும். அன்னாரது நினைவாகவும் மஹாலய விரத உபயமாகவும் அன்னாரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




05 ஒக்டோபர் 2024 சாமியான் அரசடி கரவெட்டியைச் சேர்ந்தவர்களான திரு திருமதி இராஜதுரை மாணிக்கம் இணையர்களை மஹாலய விரத நாள் அன்று நினைவு கூர்ந்து கனடாவில் வசிக்கும் அன்னார்களது பிள்ளைகள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




05 ஒக்டோபர் 2024 சனிக்கிழமை யாழ்.பெருமாள் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பத்மநாதன் கனகராஜா அவர்களது 10வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




05 ஒக்டோபர் 2024 சனிக்கிழமை யாழ்நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு திருமதி மதன் துஷாந்தி தம்பதிகளின் செல்வப்புதல்வி உருத்திரசாயி மதனின் 4வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி உருத்திரசாயி தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




06 ஒக்டோபர் 2024 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி வத்சலா கண்ணன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி வத்சலா கண்ணன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார். வாழ்க வளமுடன்!




08 ஒக்டோபர் 2024 செவ்வாய்க்கிழமை நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு வாசுதேவன் துரைராஜா அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது நினைவாக கனடாவில் வசிக்கும் திரு சுதாகர் குடும்பமும் திரு சாந்தகுமார் குடும்பமும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




08 ஒக்டோபர் 2024 செவ்வாய்க்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




10 ஒக்டோபர் 2024 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சசிதரன் சசிகலா இணையர்களது செல்வப்புதல்வன் துவாரகன் சசிதரனின் 28வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் துவாரகன் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்


Nathaswara Thavil Music Of Global Inc.
நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு
27th Anniversary
இடம் :
TAMIL ISAI KALAMANDRAM
1120, Tapscott Rd, Unit, #3,
Scarborouch ON, M1Y 1E8
Oct-19-2024
மாலை 4.30 மணிக்கு ஆரம்பம்
அனுமதி இலவசம்
நாட்டிய வேதா இந்திய கிளாசிக்கல் டான்ஸ் ஸ்ரீமதி ஜெயா பத்மினி ஆனந் அவர்களின் மாணவிகள் வழங்கும் பரதநாட்டியம்.
சக்தி சங்கீத அகடமி ஸ்தாபகர் சங்கீத வித்தகி திருமதி பராசக்தி விநாயகதேவராஜா அவர்களின் மாணவ மாணவிகள் வழங்கும் இன்னிசை
ஏழிசை மதுரசபா ஸ்தாபகர் வீணை வித்துசி திருமதி கல்யாணி சுதர்சன் அவர்களின் மாணவிகள் வழங்கும் வீணை இசை.
தவில் வித்துவான் கலைமாமணி திருப்புன்கூர் திரு. T.G முத்துக்குமாரசாமி அவர்கள்
நாதஸ்வர வித்துவான் அளவையூர் கலாநிதி R. கேதீஸ்வரன் அவர்கள்
நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு 27வது வருட விழாவை கொண்டாட இருக்கிறது இவ்வருடம் அக்டோபர் மாதம் 19ஆம் தேதி நடைபெறுகிறது. விழாவை சிறப்பிக்க இந்தியாவில் இருந்து சிறப்பு வருகை தருகிறார்கள். தவில் வித்வான் கலைமாமணி திருப்புன்கூர் T.G. முத்துகுமாரசுவாமி அவர்களும் நாதஸ்வர வித்வான் அளவையூர் கலாநிதி R. கேதீஸ்வரன் அவர்களும் அத்துடன் Toronto, Montreal ஆலயங்களில் இருக்கும் நாதஸ்வர தவில் வித்வான்களும் மற்றும் Toronto, Montreal நாதஸ்வர தவில் வித்வான்களும் இணைந்து மங்கள இசையை சிறப்பிக்க உள்ளார்கள் அத்துடன் வளர்ந்துவரும் இசைக் கலைஞர்களின் பாட்டு, வயலின், மிருதங்கம், வீணை, பரதநாட்டியம் ஆகிய நிகழ்வுகளும் நடைபெறவுள்ளது. அனைத்து குருமார்கள் நாதஸ்வர தவில் கலைஞர்கள் மற்றும் ரசிக பெருமக்கள் அனைவரையும் வருக வருக என நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு வரவேற்கிறது.
விபரங்களுக்கு: நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு
DR. ஆ. முருகதாஸ் Tel:416-420-1309 / 289-660-3850
Email: ntm97@yahoo.com web:www.nathaswarathavil.org
Design and Print By Designs 2 Print @ Majestic City : Prabagar - 647.858.2290 / 416 292 4999 / www.designs2prints.com


குடும்பத்துடன் தீபாவளியை கொண்டாடி மகிழ
பிரம்மாண்டமான இசை நிகழ்ச்சி
கனடா, மற்றும் தென்இந்திய கலைஞர்களின் பங்களிப்பில்
AN EVENT BY
33 YEARS
CANADA TAMILOSAI
சுகமான ராகங்கள்
VIBRANT HOSPITALITY GROUP
SATURDAY 26TH OCTOBER 2024 AT 4:30 PM
VENUE : CANADA EVENT CENTRE Whitby
Kalyan's Golden Rhythms
$30, $50, VIP, VVIP
FOR TICKETS :
+4166255010
eventbrite.ca
DANCE GROUP :
PRIMA DANCE SCHOOL EST. 2011
LIVE MUSIC



கலாபூஷணம் சோக்கல்லோ
சண்முகம்அரங்கு
yugam radio
yugam TV
CANADIAN TAMIL ARTISTS' ASSOCIATION
கலைவேந்தன்
கணபதி ரவீந்திரன்
நவரசத்தாரகை
ரூபி யோகதாசன்
கனடிய தமிழ் கலைஞர்கள் சங்கம்
யுகம் வானொலி, யுகம் தொலைக்காட்சி இணைந்து
பெருமையுடன் வழங்கும்
20வது ஆண்டு
நாடகப் பெருவிழா
2024
சிரிக்க ! சிந்திக்க!! சிந்தனைக்கு விருந்தளிக்க!!!
ஒரே மேடையில் ஐந்து நாடகங்கள்.
நிகழ்ச்சி தொகுப்பாளர்
S.J. பிரசாந்
SATURDAY
OCT
19
@4:30PM
Toronto Pavilion
190 Railside Rd,
North York, ON M3A 1A3
TICKETS: $20
Ravi 416-898 7284 / Ruby 416-670-6522




Skandavarodaya Old Students'Association-Canada
ஸ்கந்தவரோதயா பழையமாணவர் சங்கம் - கனடா
SKANDA NITE
34th ANNIVERSARY
1991- 2024
SATURDAY, OCTOBER 19TH 2024 AT 6 PM
Kennedy Convention Centre
1199 Kennedy Road, Scarborough M1P 2L2
PRIMA
Lathan Brothers Music Group
Please join us on this evening
for dinner and entertainment.
Nada:416-616-8751 Judita:416-402-4495 Jeyadevi:647-454-9617

தமிழ் மிரர்
Tamil Mirror

# 19th Year Celebrations & Awards Gala 2024

## NOVEMBER 3 | SUNDAY

Chinese Cultural Centre 5183 Sheppard Ave East Call: 416-697-0126



# கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 - Tel : **416-321-6104**



## ANNUAL GENERAL MEETING / ELECTION 2024

**TO ALL ACTIVE MEMBERS OF SRI AYYAPPA SAMAJAM OF ONTARIO**

The 29th Annual General Meeting (AGM) of Sri Ayyappa Samajam of Ontario will be held on Saturday October 19, 2024 from 10:00am to 1:00pm.
The venue for the meeting will be
635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8.
Election for 3 (Three) new Board of Directors for 2024 will be held on Saturday, October 26, 2024, between 10 Am to 2 PM at Canada Sri Ayyappan Temple, Hall 2.
Nomination kit can be collected from the office from October 1, 2024 and submit the completed kit latest by October 10, 2024 by 12.00 noon.

For further details, please contact the temple – 416-321-6104 / 416-321-7558 - *Board of Directors*

## வருடாந்த பொதுக்கூட்டம் / தேர்தல் 2024

அன்புடையீர்!

ஸ்ரீ ஐயப்ப சமாஜம் ஒப் ஒன்ராறியோவின் 29வது ஆண்டிற்கான வருடாந்த பொதுக்கூட்டம் 19-10-2024 சனிக்கிழமை காலை 10.00 முதல் பகல் 1:00 மணிவரை ஆலய கலாச்சார மண்டபத்தில் இடம்பெறும்.
2024ஆம் ஆண்டுக்கான மூன்று (3) நிர்வாக அங்கத்தவர்களுக்கான தெரிவு (தேர்தல்), 26-10-2024 சனிக்கிழமை காலை 10:00 மணி முதல், பகல் 2:00 மணிவரை ஐயப்பன் ஆலய கலாச்சார மண்டபம் - 2 இல் இடம்பெறும்.
முக்கிய குறிப்பு: விண்ணப்ப பத்திரம் ஒக்டோபர் 1, 2024 முதல் ஆலய காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும், முடிவு தேதி அக்டோபர் 10, 2024 நண்பகல் 12:00 மணி.

மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் தொடர்புகொள்ளவும். *அறங்காவலர் சபையினர் :* 416.321.6104, 416.321.7558

# பார் பெர்மிற்

**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து**
**– நிலாந்தன் –**



அரசுத் தலைவர் அனுர, பார் பெர்மிற் — மதுச்சாலை அனுமதிகள் தொடர்பான விடயத்தைக் கைவிட்டாலும் சுமந்திரன் அதனைக் கைவிட மாட்டார் போலத் தெரிகிறது என்று ஒரு வெளிநாட்டில் வசிக்கும் நண்பர் முகநூலில் எழுதியுள்ளார். அதில் உண்மை உண்டு.

தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு பகுதியினருக்கு ரணில் விக்கிரமசிங்க மதுச்சாலை அனுமதிப் பத்திரங்களை வழங்கினார் என்ற குற்றச்சாட்டை பொதுவெளியில் அதிகமாக முன்வைத்ததும் அதைப் பிரசித்தப்படுத்தியதும் சுமந்திரனும் அவருடைய அணியினரும் தான். ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தன் வசப்படுத்துவதற்கு அவ்வாறு மதுச்சாலை அனுமதிப் பத்திரங்களை வழங்கியதாகக் குற்றஞ் சாட்டப்படுகின்றது.

தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளே தமது சொந்த மக்களுக்கு மது விற்கிறார்கள் என்பது தமிழ் பொது உளவியலில் தாக்கத்தைச் செலுத்தக்கூடிய ஒரு குற்றச்சாட்டு. சுமந்திரன் அதை நன்கு விளங்கி தனக்கு எதிரான தமிழ் அரசியல்வாதிகளுக்கு எதிராக அதனை திட்டமிட்டுக் கட்டமைத்து வருகிறார்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திடம் மதுச்சாலைகளுக்கான அனுமதிப் பத்திரத்தை அல்லது எரிபொருள் விற்பனை நிலையத்துக்கான அனுமதிப் பத்திரத்தை வாங்குகிறார்கள், மதுசாலைகளையும் எரிபொருள் விற்பனை நிலையங்களையும் தாங்களே நடத்துகிறார்கள் அல்லது தங்களுடைய பினாமிகளுக்கு ஊடாக நடத்துகிறார்கள் என்ற குற்றச்சாட்டு புதியது அல்ல. கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மீதும் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மீதும் அவ்வாறான குற்றச்சாட்டுக்கள் உண்டு.

ஆனால் தொகையாக ஒரு தொகுதி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது அவ்வாறு குற்றச்சாட்டுகள் வைக்கப்படுவது இது தான் முதல் தடவை. அவ்வாறான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதன் மூலம் அந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை சிறுமைப்படுத்தலாம், மக்கள் முன் அம்பலப்படுத்தலாம் அவமானப்படுத்தலாம். அவர்களுடைய வாக்காளர்கள் மத்தியிலேயே அவர்களுடைய மதிப்பைக் குறைக்கலாம். அவர்கள் மீண்டும் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படுவதையும் தடுக்கலாம்.

தமிழ்ப் பொதுப் புத்திக்குள் குடியாமை அதாவது மது அருந்தாமை என்பது ஓர் ஒழுக்கமாக கருதப்படுகின்றது. எனினும் தமிழ் மக்கள் மத்தியில் தோன்றிய பல சான்றோர், துறைசார் நிபுணர்கள் மதுப்பிரியர்களாக இருந்திருக்கிறார்கள் இருக்கிறார்கள்.

இங்கே பிரச்சினை எங்கு வருகிறது என்றால் மக்கள் பிரதிநிதிகள் மதுச்சாலை அனுமதிப் பத்திரங்களைப் பெற்றிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு தான். அவ்வாறு குற்றஞ் சாட்டப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவராகிய விக்னேஸ்வரன் அதை ஏற்றுக் கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியதன் விளைவாக இப்பொழுது சர்ச்சைகளுக்குள் சிக்கியிருக்கின்றார்.

ஆனால் குற்றஞ் சாட்டப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களில் அவர் ஒருவர் தான் இதுவரை குற்றச்சாட்டு தொடர்பாக தனது வாக்காளர்களுக்கு தன்னிலை விளக்கத்தை வழங்கியிருக்கிறார். ஏனைய யாருமே அது தொடர்பாக வாய் திறக்கவில்லை. அரசுத் தலைவர் அந்தப் பட்டியலை வெளிவிடும் வரை காத்திருக்கிறார்களோ தெரியவில்லை.

ஆனால் குற்றச்சாட்டுகளில் உண்மை உண்டா இல்லையா என்பதனை தமது மக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய பொறுப்பு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உண்டு. மதுச்சாலை அனுமதிப் பத்திரங்களில் மட்டுமல்ல காசுப் பெட்டி கைமாறியது ,கள்ள டீல்கள் செய்தது போன்றவை தொடர்பாகவும் வாய்திறக்க வேண்டும்.



இவை தொடர்பில் அவர்கள் கள்ள மௌனம் சாதிக்க முடியாது. இவை போன்ற விடயங்களில் தமது சொந்த மக்களுக்குப் பொறுப்புக்கூற முடியாத அல்லது பதிலளிக்க முடியாத அரசியல்வாதிகள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கத் தகுதியற்றவர்கள்.

தென்னிலங்கையில் இப்பொழுது அனுர அலை ஒன்று அடிக்கத் தொடங்கியிருக்கிறது. தமிழ் நோக்கு நிலையில் அது மெய்யான மாற்றம் இல்லைத் தான். ஆனாலும் அரசியலில் நேர்மையானவர்களையும் கண்ணியமானவர்களையும் தெரிவு செய்ய வேண்டும் என்ற பொது ஜன விருப்பத்தை அது மீண்டும் அரங்கில் பேசுபொருள் ஆக்கியிருக்கிறது. அந்த அலை தமிழ் மக்களையும் தொற்றிக் கொண்டுள்ளது.

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் உண்மையானவர்கள், நேர்மையானவர்கள், கண்ணியமானவர்கள் போட்டியிட வேண்டும். குற்றச்சாட்டுக்கு இலக்கானவர்களும் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் அரசியலை தேக்க நிலையில் வைத்திருப்பதற்கு பொறுப்பானவர்களும் போட்டியிடக் கூடாது என்ற கோரிக்கைகள் வலிமையாக மேலெழுகின்றன. பெண்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும், பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும், தமது மக்களுக்கு பொறுப்புக் கூறத்தக்க நேர்மையானவர்கள், தகுதியுள்ளவர்கள் அரசியலுக்கு வர வேண்டும் என்ற கோரிக்கைகள் பரவலாக மேலெழுகின்றன.

இப்படிப்பட்டதோர் பின்னணியில் தமது அரசியல் எதிரிகளுக்கு எதிராக சுமந்திரன் அணியினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கு வலிமை உண்டு. தமிழ்ப் பொது புத்தியை பொறுத்தவரை மக்கள் பிரதிநிதிகள் மதுச்சாலை அனுமதிப் பத்திரங்களைப் பெற்றது, அல்லது தமது பினாமிகளின் ஊடாக மதுச்சாலைகளை நிர்வகிப்பது என்பது அவர்களைத் தகுதி நீக்கம் செய்யக் கூடியது. ஆனால் தன் அரசியல் எதிரிகளை அவ்வாறு தகுதி நீக்கம் செய்ய முற்படும் சுமந்திரன் அணி அந்த குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் தகுதியுடையதா?

ஏனெனில் சுமந்திரன் எப்படிப்பட்ட ஒரு அரசியலை செய்கின்றார்? தமிழ் மக்களைச் சிதறடிக்கும் அரசியலைத் தான் அவர் செய்து வருகிறார். அவர் எல்லாவற்றையும் கொட்டிக் குலைக்கிறார். தனது சொந்தக் கட்சியையும் கொட்டி குலைக்கிறார். அவரும் தமிழ் மக்களுக்குப் பொறுப்புக் கூறாத ஒருவர் தான். அதைவிட முக்கியமாக, தமிழ் மக்களுக்கு எதிரான இனஅழிப்புத் தொடர்பில் பொறுப்புக்கூறத் தயாரற்ற சஜித் பிரேமதாசாவுக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று அவர் கேட்டார். ஜனாதிபதித் தேர்தல் நடந்த பொழுது ஐநா கூட்டத் தொடரும் நடந்து கொண்டிருந்தது. அங்கே போர்க்களத்தில் நிகழ்ந்த குற்றங்கள் தொடர்பாக சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான அலுவலகத்தின் அடுத்த கட்டத்தைத் தீர்மானிப்பது தொடர்பில் விவாதங்கள் நடந்து கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் சஜித் பிரேமதாச பொறுப்புக்கூறல் தொடர்பில் தமிழ் மக்களுக்கு எந்த வாக்குறுதியையும் வழங்கவில்லை.

பொறுப்புக்கூறல் எனப்படுவது இறந்த காலத்தில் நிகழ்ந்த குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறுவது. இறந்த காலத்துக்கு பொறுப்புக்கூறத் தயாரற்ற ஒரு தலைவர் நிகழ்காலத்துக்கும் எதிர் காலத்துக்கும் எப்படிப் பொறுப்புக் கூறுவார்? இந்த விடயத்தில் பொறுப்புக் கூறத் தயாரற்ற சஜித் பிரேமதாசவுக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும்



என்று கேட்கும் ஒரு அரசியல்வாதி, தமிழ் அரசியலை எங்கே கொண்டு போய் நிறுத்த முயற்சிக்கின்றார்? தமிழ் மக்களுக்கு எப்படிப்பட்ட ஒரு நீதியைப் பெற்றுத் தர முயற்சிக்கின்றார்?

பிரதான அரசியல் விவகாரத்தில் தனது சொந்த மக்களுக்குப் பொறுப்புக் கூறாத ஓர் அரசியல்வாதி தனது அரசியல் எதிரிகள் சலுகையாக மதுச்சாலை அனுமதிகளைப் பெற்றது குறித்துக் குற்றம் சாட்டுகிறார்.

தனது அரசியல் எதிரிகளை சிறுமைப்படுத்தித் தோற்கடிக்க முயற்சிக்கும் அவர் எப்படிப்பட்ட ஓர் அரசியலை முன்னெடுக்கிறார்? தமிழ் மக்களைச் சிதறடிக்கும் ஓர் அரசியலைத் தானே முன்னெடுக்கிறார்? தனது அரசியல் எதிரிகளைக் குற்றஞ் சாட்டுவதன் மூலம் அவர் தன்னை குற்றமற்றவராகக் காட்டப் பார்க்கிறாரா?

கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மிதவாத அரசியல் எனப்படுவது குற்றங்கள் மிகுந்ததாக, கண்ணியமற்றதாக நேர்மையற்றதாக மொத்தத்தில் பொறுப்புக்கூறத் தயாரற்றதாக மாறி விட்டது. அதற்கு சம்பந்தரும் பொறுப்பு, சுமந்திரனும் பொறுப்பு. சுமந்திரனை குற்றஞ்சாட்டும் ஏனைய தமிழ் அரசியல்வாதிகளும் பொறுப்பு. ஆனால் அதைத் தமிழ்த் தேசிய அரசியலுக்கு எதிரான சக்திகள் மிகவும் தந்திரமாக திட்டமிட்டு பயன்படுத்துகின்றன. எப்படியென்றால், தமிழ் மக்கள் தெரிந்தெடுத்த பிரதிநிதிகளையே அவர்கள் முன் குற்றவாளிகளாகக் காட்டி, சிறுமைப்படுத்தி, கீழ்மைப்படுத்தி தமது சொந்த பிரதிநிதிகளை தமிழ் மக்கள் நம்ப முடியாத ஒரு சூழலை அவர்கள் ஏற்படுத்துகிறார்கள். இது எங்கே கொண்டு போய் விடும்?

தமது சொந்தப் பிரதிநிதிகளின் மீது நம்பிக்கையிழந்த மக்கள் தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தின் அலைக்குப் பின் போகக்கூடிய வாய்ப்புகளை அதிகப்படுத்தும். தமிழ் வாக்குகள் தமிழ்த் தேசிய அரசியலுக்கு வெளியே போகும் வாய்ப்புகளை அதிகப்படுத்தும்.

இதை இப்படி எழுதுவதற்காக இக்கட்டுரையானது மதுச்சாலை அனுமதிகளைப் பெற்ற அரசியல்வாதிகளை அம்பலப்படுத்தக் கூடாது என்று கூறுவதாக எடுத்துக் கொள்ளத் தேவையில்லை.

தமது வாக்காளர்களுக்குப் பொறுப்புக் கூறும் தகுதியற்றவர்கள் அனைவரையும் தமிழ் அரசியலில் இருந்து அகற்ற வேண்டும். ஆனால் அதனை தமிழ்த் தேசிய நோக்கு நிலையில் இருந்து செய்ய வேண்டும். தமிழ் மக்களை ஒரு இனமாகத் திரட்டுவது தேசமாகத் திரட்டுவது என்ற நோக்கு நிலையிலிருந்து செய்ய வேண்டும். தமிழ்த் தேசியத்தைச் சிதைக்கும் நோக்கு நிலையிலிருந்து செய்ய முடியாது.

தமிழ் மக்களைச் சிதறடிக்கும் அரசியல்வாதிகள் அதைச் செய்வது என்பது தமிழ்த் தேசிய அரசியலை சிதைக்க முற்படும் வெளித் தரப்புகளுக்குத் தான் சேவகம் செய்யும்.

மாறாக தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டும் நோக்கு நிலையில் இருந்து தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள நேர்மையற்றவர்கள், கண்ணியமற்றவர்கள், நபுஞ்சகர்கள், நசியல் பேர்வழிகள், வழிந்தோடிகள், டீலர்கள் போன்றவர்களைத் தமிழ்மக்கள் தோற்கடிக்க வேண்டும்.

# அநுரவைக் கையாளும் சீனா

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



ஜனாதிபதி தேர்தலுக்கு ஒரு வாரம் முன்னதாக கொழும்பில் உள்ள சீனத் தூதுவர் சி சென்ஹொங் ஊடகவிய லாளர்கள் சிலரைச் சந்தித்திருந்தார். தாய்வானில் இருந்து சீனா தனியாகப் பிரிந்து செயற்படத் தொடங்கிய 75 ஆவது ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்படுவதை முன்னிட்டு அந்த ஊடகச் சந்திப்பு இடம்பெற்றது.

ஒக்டோபர் முதலாம் திகதி 75ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும், சீனா, கடந்து வந்த பாதைகள், தற்போது அதன் நிலை, பொருளாதார பலம், எதிர்காலத்தில் அதன் முக்கியத் துவம் என்பனவற்றை விளக்கும் வகையில் சீன தூதுவர் உரையாடி யிருந்தார்.

அதன் போது அவர், அடுத்த ஐந்து ஆண்டுகள் இலங்கைக்கும் சீனாவுக் கும் மிக மிக முக்கியமானவை. புதிய திருப்புமுனையான ஐந்து ஆண்டு பயணத்தில் இந்த இரண்டு நாடுகளும் நுழையப் போகின்றன என்று குறிப் பிட்டிருந்தார். அத்துடன் இலங்கை யில் ஜனாதிபதி தேர்தல் நடக்கப் போவதையும் அவர் சுட்டிக் காட்டி இருந்தார். அதற்கு அப்பால் இலங்கை அரசியலை அவர் தொட்டுக் கொள்ள வில்லை. ஆனால் அவர் இரண்டு நாட்டு அரசியலையும் சேர்த்து பேசி யது திருப்புமுனை என்று குறிப்பிட் டது எல்லாமே ஜனாதிபதி தேர்தல் முடிவுகளை அடிப்படையாகக் கொண் டது தான்.

75ஆவது ஆண்டை கொண்டாடும் சீனா, இன்னும் ஐந்து ஆண்டுகளில் 80 ஆண்டை கொண்டாடப் போகி றது. இந்த ஐந்து ஆண்டுகளுக்குள் பொருளாதார வளர்ச்சியிலும் சரி, படை பலத்திலும் சரி தன்னை அசைக்க முடியாத சக்தியாக மாற்றிக் கொள்வ தற்கு திட்டமிட்டிருக்கிறது.

2029 ஆம் ஆண்டு 80ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் போது குறிப்பிட்ட இலக்குகளை அடைய திட்டமிட்டிருக்கிறது. இலங்கையில் அடுத்த ஐந்து ஆண்டுகள் திருப்பு முனையாக இருக்கும் என்று சீனத் தூதுவர் குறிப்பிட்டதற்கு காரணம் ஆட்சி மாற்றம் தான். இலங்கையில் இந்த முறை ஆட்சி மாற்றம் நிகழும், அநுரகுமார திசாநாயக்க பதவிக்கு வருவார் என்பதை சீனா முன்னரே அறிந்திருந்தது.

இந்தியா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளில் புலனாய்வுப் பிரிவுகள் இதனை ஓரளவுக்கு கணித்திருந்தன. இந்த ஆட்சி மாற்றம் குறித்த நம்பிக்கையான தகவல்கள் கிடைத் திருந்த போதும், சீனா அது பற்றி வாய் திறக்கவில்லை. அவ்வாறு செய் தால், குட்டையை குழப்பி விடும் ஆட்சி மாற்ற வாய்ப்புகளைக் கெடு த்து விடுமென சீனா கருதியிருக்க லாம்.

தேர்தலுக்கு ஒரு வாரம் முன்னதாக சீனத் தூதுவர், அடுத்த ஐந்து ஆண்டுகள் திருப்புமுனையாக இரு க்கும் எனச் சூசகமாக குறிப்பிட்டதை பலர் கவனத்தில் எடுக்கவில்லை. ஜனாதிபதி தேர்தல் முடிந்து சில நாட்களே ஆகியிருந்த நிலையில், கடந்த செப்டெம்பர் 26 ஆம் திகதி சீனாவின் 75ஆவது ஆண்டு நிறைவு கொண்டாட்டத்திற்கு, உலகம் முழு வதிலும் உள்ள சீன தூதரகங்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இலங்கையில் உள்ள சீன தூதரகமும் ஷங்ரிலா விடுதியில் ஒரு வரவேற்பு நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. அந்த நிகழ்வில் வெளிவிவகார அமை ச்சராக பதவியேற்ற விஜித ஹேரத் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ மைத்திரிபால சிறிசேன ஆகியோரும் கலந்து கொண் டிருந்தார்கள்.

ஏற்கனவே நாட்டை விட்டு வெளி யேறிய கோட்டாபய ராஜபக்ஷ இந்த நிகழ்வில் பங்கேற்கவில்லை. ஆனால் ஜீலை 29 ஆம் திகதி ஷங்ரிலா விடுதி யில் சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் நிறுவக தினத்தை



முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வுக்கு கோட்டாபய ராஜபக்ஷவும் அழைக்கப்பட்டிருந்தார். அவர் நாட்டில் இருந்திருந்தால் இந்த நிகழ் வில் பங்கேற்று இருப்பார். புதிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சீனத் தூதரகத்தின் நிகழ்வில் பங்கேற்க கூடிய நிலை இருக்கவில்லை. பதவி யேற்ற சில தினங்களே என்பதால் பல நிர்வாக வேலைகள் அவருக்கு இருந்தன.

அதே போல பதவியேற்ற கையுடன் சீன தூதரகத்தின் நிகழ்வில் பங்கேற்றால் அது விமர்சனங்களை ஏற்படுத்தும் என்பதும் தெரிந்த விடயம் தான்.

ஏனென்றால் அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட தும், இலங்கையின் முதலாவது மார்க்சிஸ்ட் ஜனாதிபதி என்றே சர்வ தேச ஊடகங்கள் அடையாளப்படுத்தின. இடதுசாரி பாரம்பரியத்தில் வளர்ந்த அவரது கட்சி, இப்போது முழுமை யான இடதுசாரி கொள்கையை பின் பற்றா விட்டாலும் சீனாவுக்கும் அதற்குமான தொடர்பு அதிகம். அநுரவை ஆட்சிக்கு கொண்டு வரு வதில், சீனா முக்கிய பங்கு வகித்து வருவதாக ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்தன. அத்துடன் அநுர குமாரவை சீனாவே இயக்கி வருவதாக வும் இந்த ஆட்சி மாற்றம் இந்தியா வுக்கு சாதகமானதாக இருக்காது, சவாலாக இருக்கும் என்றும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வரு கின்றன.

கடந்த ஒக்டோபர் முதலாம் திகதி பிரான்சில் பிரபல பத்திரிகையான, லீமொன்டே (lemonade) யில் அதன் புதுடெல்லி செய்தியாளரான சோபிலா ன்ட்ரின் (Sophie Landrin) ஒரு கட்டுரையை வரைந்திருந்தார். இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க இந்தியாவில் இரு ந்து விலகி இருப்பார் என எதிர் பார்க்கப்படுகிறது என்பது தான் அதன் தலைப்பு.

ஜனாதிபதி அநுர, தனது கட்சி முன்னோடிகளை விட பீஜிங்கிற்கு ஆதரவாக இருக்கலாம். இது இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும், கௌதம் அதானிக்கும் பின்னடைவாகும் என் றும் அதில் கூறப்பட்டிருந்தது.

இந்திய ஊடகங்கள் பலவும் இலங்கை யில் அநுரகுமார திசநாயக்க பதவிக்கு வந்ததை ஆபத்தான ஒரு அறிகுறியாக சுட்டிக்காட்டி இருந்தன. அவை இந்தியாவின் நலன்களை மையப்படு த்தி கட்டுரைகளை வரைந்திருந்தன.

குறிப்பாக மாலைதீவில் இடம் பெற்ற ஆட்சி மாற்றம், இலங்கையில் இடம் பெற்றிருக்கின்ற ஆட்சி மாற்றம், பங்களாதேஷில் நிகழ்ந்திருக்கின்ற ஆட்சி மாற்றம், ஆகியவற்றுடன் நேபாளத்தில் மீண்டும் சர்மா ஒலி அரசாங்கம் பதவிக்கு வந்திருப்பது, எல்லாமே இந்தியாவுக்கு சாதகமற்றது என்பதை தெளிவாக சுட்டிக் காட்டி



யிருக்கின்றன.

இந்தியா தனது அண்டை நாடுகளு டன் கொண்டிருக்கும் துலக்கமற்ற உறவுகளை வெளிப்படுத்தி, அதன் பூகோள அரசியல் கரிசனைகளை வெளிப்படுத்தும் வகையில், இந்திய ஊடகங்களின் செய்திகள் அமைந்திருக் கின்றன. இதனை சீனா விரும்ப வில்லை என தெரிகிறது. ஆனால் இராஜதந்திர ரீதியாக சீனா அதனை வெளிக்காட்டவில்லை. முன்னர் சீனா, இலங்கையில் உள்ள தனது தூதரக த்தையும் ஓநாய் வீரன் இராஜதந்திரத் திற்காக பயன்படுத்தியது. உடனுக்கு டன் விமர்சனங்களுக்கு பதிலடி கொடு த்துக் கொண்டிருந்தது.

அண்மைக் காலங்களில் இந்தியாவிடம் கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் பெரிதாக விமர்சனங்களை முன்வைக்க வில்லை. ஆனால், சீனாவின் அதிகார பூர்வ நாளேடுகளில் ஒன்றான குளோபல் ரைம்ஸ் இலங்கை குறித்த இந்தியா வின் கரிசனைகளை கடுமையாக தாக்கி கட்டுரைகளை வரைந்து வரு கிறது. இந்தியாவுக்கும் இந்திய ஊடக ங்களுக்கும் கடுமையான போட்டியை அது கொடுத்துக் கொண்டிருக்கிறது.

சீன அரசின் 75 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் உரையாற்றிய சீன தூதுவர் கீ சென்ஹொங், சீனாவும் இலங்கையும் திருப்புமுனையான ஒரு நட்பு முனையான ஒரு கட்டத்தில் இருப்பதாக குறிப்பிட்டு இருந்தார்.

இரண்டு நாடுகளுக்கு இடையில் ஒத்துழைப்புகளையும் தொடர்ந்து பலப்படுத்திக் கொள்ளவும் அவர் விருப் பத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். அதற்கு அப்பால், கடன் மறுசீரமை ப்புக்கு உதவத் தயாராக இருப்பதாக வும் அவர் கடந்த புதன்கிழமை ஜனாதிபதி அநுரவைச் சந்தித்து கூறி ரனில் விக்கிரமசிங்க கடன் மறு சீரமைப்புக்கு சீனா பெரியளவில் இண ங்கவில்லை. ஆனால் புதிய அரசாங்க த்திற்கு சீனா கடன் தள்ளுபடி அல்லது சலுகையை கொடுத்து இந்தியா, மற்றும் மேற்குலகத்துக்கு அதிர்ச்சி யைக் கொடுக்கவும் வாய்ப்புகள் உள்ளன.

கடன் பொறி இராஜதந்திரம் தொடர் பாக இந்தியா மற்றும் மேற்குலகம் தொடர்ச்சியாக முன்வைத்து வரும் குற்றச்சாட்டுகள் சீனாவை மிகவும் பாதித்திருக்கிறது. இலங்கையின் ஆட்சியில் இருந்த ராஜபக்ஷ வம்சம் அதிகாரத்தில் இருந்து அகற்றப்பட்ட தும் கூட இந்த பிரசாரத்தின் மூலம் தான். இதனை சீனாவினால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

கடன்பொறி இராஜதந்திரம் பற்றிய குற்றச் சாட்டுக்கள் ராஜபக்ஷவினரின் அரசியலில் சூனியத்தை ஏற்படுத்தியது போல, இலங்கையில் சீனாவின் இராஜ தந்திரம் மற்றும் அரசியலுக்கும் சூனியத்தை ஏற்படுத்தி விடக்கூடாது என்பதில் சீனா கவனமாக இருந்தது. அதனால் தான் இலங்கையை மையப் படுத்திய போட்டியில் ஈடுபடுவதாக, காட்டிக் கொள்வதை தவிர்த்தது.

சீனா ராஜபக்ஷவினருக்கு மாற்றாக அநுரகுமாரவை வளர்த்தெடுக்கும் முயற்சிகளை மீண்டும் முன்னெடு த்தது. சீனாவிடம் வழங்கி வருகின்ற உதவிகள், நிதிகள் எல்லாமே தமக்கு சார்பான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத் தான். அதனை அடிப்படையாகக் கொண்டு தான், சீனாவின் எல்லா திட்டங்களும் அமைந்து இருக்கின்றன. ஆட்சி மாற்றத்துக்குப் பிறகு இலங்கையில், இந்திய– சீன முரண்பாடுகள் இன்னும் கூர்மையடையும் என்ற கருத்து பரவலாக காணப்பட்டது.

ஆனால் ஜனாதிபதி அநுரகுமார திசா நாயக்க, பிராந்தியத்தில் இந்திய– சீன் அதிகாரப் போட்டிக்குள் இலங்கை 'சாண்ட்விச் துண்டு' போல சிக்கி கொள்ளாது என்று கூறியிருக்கிறார்.

அவர் அதனை கூறி இருந்தாலும் அத்தகைய சிக்கல்களில் சிக்கிக் கொள்ளாமல் தவிர்க்க நினைத்தாலும். அவ்வளவு இலகுவாக அதிலிருந்து விலக முடியாது. அவருக்குள் இருக் கும் சீன சார்பு தன்மையும், சீனாவின் செல்வாக்கும் அவரை பூகோள அரசி யல் போட்டிக்குள் நிச்சயம் முத்துச் செல்லும். அதிலிருந்து இலங்கையோ அல்லது இலங்கையின் ஆட்சியாளர் களோ விலகிக் கொள்ள முனைகிறார் கள் என்றால், இலங்கைத் தீவின் கேந்திர முக்கியத்துவம் முடிவுக்கு வருகிறது என்றே அர்த்தம்.

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
உங்கள் அபிமான ஈழநாடு
பத்திரிகையின்
32வது ஆண்டு விழா
சங்கீத சங்கமம் 2025
விபரங்களுக்கு
ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# ஜனாதிபதி அநுரவுக்கு அம்பிகாவின் “அட்வைஸ்”

- அழகு குணசீலன் -

இவரை இரண்டு வழிகளில் தமிழ் மக்கள் நன்கு அறிந்து வைத்திருக்கிறார்கள். ஒரு வழியில் மனித உரிமைகள் செயற்பாட்டாளராக.

மறுவழியில் கடந்த 2020 பாராளுமன்ற தேர்தலில் எம்.ஏ.சுமந்திரனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பெண் வேட்பாளராக களமிறக்க முயற்சிக்கப்பட்டவர் என்ற வகையில்.

ஜனாதிபதி தேர்தல் முடிந்த கையோடு சமூக ஊடகப்பதிவு ஒன்றில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு அட்வைஸ் பண்ணி பதிவொன்றை இட்டிருக்கிறார் அம்பிகா சற்குணநாதன்.

இது பற்றி யாழ்ப்பாணத்தை தலைமையகமாகக் கொண்ட பத்திரிகை ஒன்றும் செய்தி வெளியிட்டுள்ளது. அம்பிகாவின் ஜனாதிபதி அநுரவுக்கான அட்வைஸ் பட்டியலில் இருந்து

தமிழர்களின் நம்பிக்கையை பெற விரும்பினால் சிங்கள பௌத்த தேசியவாதிகளை கவரும் முயற்சிகளை கைவிடுங்கள். கடும்போக்குடைய சிங்கள பௌத்த தேசிய வாதிகளை வசீகரித்தால் தேசிய மக்கள் சக்தி புதிய ராஜபக்சாக்களாக மாறும்.

ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னரான நிகழ்வுகள் நல்லாட்சி -2 ஐ நினைவூட்டுகிறது.

இலங்கையில் கூட்டணி அரசாங்கங்கள் சிறந்த வரலாற்றை கொண்டிருக்கவில்லை.

ஜனாதிபதியை விமர்சிப்பவர்களை தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் நியாயமற்ற விதத்தில் தாக்குவதும், கண்டிப்பதும் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்காதவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தப் போவதில்லை.

தேசிய மக்கள் சக்தி கருத்து வேறுபாடுகளை பொறுத்துக்கொள்ளாத வழிபாட்டு மனப்பான்மை உள்ள குழு என்ற எண்ணங்களை இது வலுப்படுத்துவதாகும்.

1994 -2000, 2005, மற்றும் 2022 இலும் சிவில் சமூக அமைப்புகள் முறைசாரா ஆலோசகர்களாக மாறி, நிழலில் செயற்பட்டன. ராஜபக்சாக்களை விமர்சித்தவர்கள் ரணில் விக்கிரமசிங்க மனித உரிமைகளை மீறிய போது விமர்சிக்க வில்லை. மாறாக கால அவகாசம் வழங்க வேண்டும் என்று கூறினார்கள். இவர்கள் அதே பாணியில் இன்றும் அநுரவை விமர்சிக்க கூடாது. அது அவரை பலவீனப்படுத்தும். அவருக்கு கால அவகாசம் வழங்கவேண்டும் என்கிறார்கள்.

உங்களுடைய தனிப்பட்ட தொடர்புகளுக்காக உரிய தகுதியற்றவர்களை உயர் பதவிகளுக்கு நியமிக்க வேண்டாம். உதாரணமாக ஜனாதிபதி ஊடகப்பிரிவுக்கு ஒரு மருத்துவர் நியமனம்.

அரசியல் அமைப்பு சீர்திருத்த நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டாம். நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுத்ததில் இருந்து ஆரம்பியுங்கள்.

யுத்த குற்றங்களில் ஈடுபட்டவர்களை உயர் பதவிகளுக்கு நியமிக்க வேண்டாம். இவ்வாறு கிட்டத்தட்ட பத்து அட்வைஸ்களை ஜனாதிபதிக்கு வழங்கியுள்ளார் அம்பிகா சற்குணநாதன்.

அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு, பதவியேற்ற தன் பின்னர் கொழும்பிலும், தென்னிலங்கையிலும் ஒரு மனித உரிமை செயற்பாட்டாளராக அவதானிக்கப்பட்ட சமகால நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டே அவரின் இந்த பதிவு இடம் பெற்றுள்ளது என்று கொள்ளமுடியும். மனித உரிமைகள் செயற்பாட்டாளர் என்ற வகையில் இந்த கருத்துக்கள் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களை∴ செயற்பாட்டாளர்களை எட்டியிருப்பதற்கு வாய்ப்பில்லை என்று முற்றாக தட்டிக் கழிக்கவும் முடியாது.

சிங்கள பௌத்த தேசிய வாதிகள் குறித்த அம்பிகாவின் அச்சம் இலங்கை அரசியல் வரலாற்றில் நியாயப்படுத்தக் கூடியதே. ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பதவியேற்ற பின்னர் அவருக்கும், பௌத்த பீடங்களுக்குமான தொடர்பு அதிகரித்துள்ளது.



நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் அரசியல் அமைப்பின் புத்தசாசன நடைமுறைகளை அனுசரித்து செயற்படவேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்கு உள்ளது. ஆனால் ஒரு இடதுசாரி என்றவகையில் அவர் மீது குறிப்பாக சிறுபான்மை தேசிய இனங்கள் கொண்டுள்ள நம்பிக்கையை அது வீணடிக்கக்கூடாது.

இலங்கை சிறுபான்மை தேசிய இனங்கள் காரணம் இல்லாமல் அச்சம் கொள்ளவில்லை. கடந்த கால சிங்கள பௌத்த தேசிய கட்சி அரசியலில் பெற்றுக்கொண்ட அனுபவங்களே இதற்கு காரணம். அம்பிகா சற்குணநாதனின் கருத்துக்கு உரம்சேர்ப்பதாக சில தினங்களுக்கு முன்னர் பௌத்த மதத்தலைவர்களை ஜனாதிபதி சந்தித்த போது அவர்கள் கூறிய ஆலோசனையும் அமைகிறது.

அரசியல்வாதிகளையும், கட்சி ஆதரவாளர்களையும் அமைச்சின் செயலாளர்களாக, மாகாண ஆளுநர்களாக, வெளிநாட்டு தூதுவர்களாக நியமிக்க வேண்டாம் என்று அவர்கள் ஜனாதிபதியை கேட்டுக் கொண்டார்கள். இப்போதைக்கு தற்காலிகமாகவேனும் கொழும்பு நகர்வுகள் எப்படி உள்ளன? என்றால் இப்படித்தான்.

ஜனாதிபதியின் ஊடகப் பிரிவுக்கு துறைசார் நிபுணத்துவமற்ற மருத்துவர் ஒருவரின் நியமனம் ஊடக வட்டாரங்களில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. யுத்த குற்ற சந்தேக நபர்களின் உயர் நியமனங்களும் மாற்றத்திற்கான திசையை காட்டுவதாக இல்லை என்ற விமர்சனம் உண்டு.

ஜனாதிபதியை விமர்சனம் செய்வது அவரை பலவீனப்படுத்தும், அவருக்கு கால அவகாசம் வழங்கப்படவேண்டும் என்ற கருத்துக்களை இலங்கையின் மனித உரிமைகள் செயற்பாட்டாளராக, மனித உரிமைகள் ஆணையாளராக செயற்பட்ட கடந்த கால அனுபவங்களில் இருந்தே அம்பிகா சற்குணநாதன் நிராகரிக்கிறார் என்று கொள்ள வேண்டி உள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னரான மாற்று கட்சி ஆதரவாளர்கள் மீதான தென்னிலங்கை வன்முறைகளைப்பற்றி குறிப்பிடும் அவரின் மாற்று கருத்து விமர்சன ஜனநாயக கலாச்சாரம், கட்சித் தலைமை மீதான வழிபாட்டு பிரமை பற்றி பதிவிடுகிறார். இவை ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம், அல்லது பாராளுமன்றத்தின் பெரும்பான்மை அதிகாரத்தினால் சட்டம் நிறைவேற்றி செயற்படுத்த வேண்டியவை அல்ல. கட்டுக்கோப்பான ஒரு இடதுசாரி அரசியல் கட்சி ஒன்றின் உறுப்பினர்கள்∴ஆதரவாளர்களுக்கான



அடிப்படை அரசியல் புரிந்துணர்வு, அரசியல் ஒழுக்கம், தோழமை சார்ந்தவை.

மேலும் அரசியல் அமைப்பு சீர்திருத்தம் குறித்த அம்பிகாவின் கருத்து முக்கிய கவன ஈர்ப்பை பெறுகிறது. அவர் நல்லாட்சி காலத்து நடவடிக்கைகளை தொடருங்கள் என்று கோருகிறார்.

இதற்கான காரணங்கள் எவை என்று நோக்கவேண்டி உள்ளது. முதலாவது அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் அமைச்சரவை முடிவாக அன்றி ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் விஜிதஹேரத் புதிய அரசியலமைப்பின் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்றும், அவை மக்கள் முன் அங்கீகாரத்திற்காக வைக்கப்படும் என்றும் கூறியிருந்தார். ஊடகங்கள் அதை சர்வஜன வாக்கெடுப்பு என்றே குறிப்பிட்டிருந்தன. அரசதரப்பு இதுவரை இந்த செய்தியை மறுக்கவில்லை. இதை நாடுதளுவிய சர்வஜன வாக்கெடுப்பு என்றே கொள்ளவேண்டி உள்ளது.

இந்த நிலையில் அம்பிகா சற்குணநாதன் நல்லாட்சி விட்ட இடத்திலிருந்து தொடங்குங்கள் என்று கோருவதன் பின்னணி என்ன? நல்லாட்சி விட்ட இடம் என்பது முன்னாள் பா.உ. எம்.ஏ.சுமந்திரனின் தனிநபர் பிரேரணையை உள்ளடக்கிய சட்ட திருத்தம். இதை ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் முக்கிய கட்சிகள் அனைத்தும் எதிர்க்கவில்லை என்பதால் இந்த வழிமுறையில் இலகுவாக இலக்கை அடையலாம் என்ற தமிழ்த் தேசிய அரசியல் நம்பிக்கைக்கும், சுமந்திரனின் செயற்பாட்டிற்குமான அங்கீகாரமாக அம்பிகாவின் இந்தக் கருத்தை கொள்ள வேண்டியுள்ளது.

புதிய அரசியலமைப்பு, சர்வஜன வாக்கெடுப்பு என்று வந்தால் சிங்கள பௌத்த பேரினவாதத்திற்குள் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வீழ்ந்து விடுவார் என்று(22ம் பக்கம் பார்க்க)



# வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா நடாத்திய கலாதீபம் 99இற்கு அகவை 25


வேலணை மத்திய மகா வித்தியாலயப் பழைய மாணவர் சங்கத்தால் முதன் முறையாக நடாத்தப்பட்ட கலைவிழா வான 'கலாதீபம்-99' ஒக்ரோபர் 09, 1999 சனிக்கிழமை மாலை 6:00 மணிக்கு ஸ்காபரோவிலுள்ள சேர் ஜோன் ஏ. மக்டொனால்ட் கல்லூரியின் கலையரங்கில் (970 இருக்கைகள் கொண்டது) மண்டபம் நிறைந்த மற்றும் பார்வையாளர்களின் ஏகோபித்த பாராட்டுதலைப் பெற்ற விழாவாகவும் நடைபெற்றுச் சங்கத்தின் வரலாற்றில் பொன்னெழுத்தால் பொறிக்கப்பட வேண்டிய நிகழ்வென்ற சாதனையைப் படைத்தது.

கல்லூரியின் பொன் விழாவையொட்டி நடாத்தப்பட்ட இவ்விழாவிற்குச் சங்கத் தின் தலைவர் திரு. சி. இளஞ்செழியன் தலைமை தாங்கினார். கல்லூரியின் பழைய மாணவரும் முன்னாள் ஆசிரி யருமான திரு.க. சிவராமலிங்கம் அவர் களது வரவேற்புரையுடன் ஆரம்பித் தது. விழா மலரான 'கலாதீபம்-99' ஐ விரிவுரையாளர் திரு. ந. பேரின்பநாதன் அவர்கள் வெளியிட அதன் முதற் பிரதியை பிரதம விருந்தினர் கலாநிதி. சு. சிவகணேசன் அவர்கள் பெற்றுக் கொண்டார். விழாவிற்குக் கிடைத்த வரவேற்பைவிட விழாமலருக்கு அதிக பாராட்டுதல்கள் கிடைத்ததை அறியக் கூடியதாக இருந்தது.

சிறுவர்களின் நடன நிகழ்ச்சிகள், கவியரங்கம், நாடகங்கள், இசைக் கச்சேரி மற்றும் மெல்லிசை நிகழ்ச்சி எனப் பலவிதமான நிகழ்வுகளையும் பார்வையாளர்கள் பலத்த கரகோசங் களுடன் ரசித்தனர். மிகக்குறுகிய கால த்தில் ஒழுங்கு செய்யப்பட்ட கன்னி முயற்சியாக இருந்தபோதும் மக்கள்







மனதில் நீங்காத இடத்தைப் பிடித்த துடன் முழு நிகழ்ச்சிகளையும் தொய் வின்றி அரங்கேற்றிய சங்க நிர்வாகத் தினரின் செயற்திறனைச் சபையை



அலங்கரித்த பார்வையாளர்கள் அனை வரும் தமது கரகோசத்தின் மூலம் பாராட்டினார்கள்.

நிறைவாகச் சங்கத்தின் செயலாளர் திரு. க. பாஸ்கரன் அவர்களது நன்றி யுரையுடன் விழா இனிதே நிறைவு பெற்றது. கலாரசிகர்களும் விறுவிறுப் பாக நடைபெற்ற நல்லதோர் கலை விழாவைப் பார்த்து ரசித்த மனநிறை வோடு இல்லம் ஏகினர் என்றால் அது மிகையல்ல.

தகவல்:- சி.இளஞ்செழியன்







# இஸ்ரேல் - ஹமாஸ் - இரான் - மத்திய கிழக்கு மோதல் எப்போது முடிவுக்கு வரும்? ஏன் தாமதமாகிறது?

வரலாற்றில் மிகவும் மோசமான தாக்குதலின் தாக்கத்தில் இருந்து இஸ்ரேல் மீண்டு வந்து கொண்டிருந்த அதே நேரத்தில் காஸா கடுமையான வெடிகுண்டு தாக்குதல்களுக்கு ஆளானது. பாலஸ்தீன இஸ்ரேல் விவகாரத்தில் இந்த மோதல் ஒரு திருப்புமுனையாக கருதப்பட்டது.

பல ஆண்டுகளாக நம்முடைய திரைகளில் இருந்து விலகியே இருந்த இஸ்ரேல் – பாலஸ்தீன மோதல்கள் கடந்த ஆண்டு மீண்டும் நம் பார்வைக்கு வந்தன.

இந்த மோதல் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சலிவன் இந்த தாக்குதல்கள் துவங்குவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு தான், இரண்டு தசாப்தங்களாக இருந்த சூழலோடு ஒப்பிடுகையில் மத்திய கிழக்கு பிராந்தியம் தற்போது மிகவும் அமைதியாக இருக்கிறது.' என்று கூறியிருந்தார்.

தற்போது ஓர் ஆண்டாக அந்த பிராந்தியம் எரிந்து கொண்டிருக்கிறது. 41 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் இறந்துள்ளனர். 20 லட்சத்திற்கும் மேற்பட்ட காஸா மக்கள் புலம் பெயர்ந்துள்ளனர். மேற்கு கரையில் மேலும் 600 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

லெபனானில் பத்து லட்சம் பேர் புலம் பெயர்ந்துள்ளனர். அங்கு இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்த மோதலின் முதல் நாளில் 1200 இஸ்ரேலியர்கள் இறந்தனர். அதன் பிறகு 350க்கும் மேற்பட்ட இஸ்ரேல் இராணுவ வீரர்கள் இறந்து போனார்கள்.

காஸாவின் எல்லையோரமும், பதட்டத்துடன் காணப்படும் லெபனான் நாட்டு எல்லையை ஒட்டிய வடக்கு இஸ்ரேலில் வாழ்ந்து வந்த இரண்டு லட்சம் இஸ்ரேலியர்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

ஹெஸ்பொலாவின் வான்வழி தாக்குதலில் 50க்கும் மேற்பட்ட இராணுவ வீரர்களும் பொதுமக்களும் உயிரிழந்துள்ளனர். மற்ற நாடுகளும் மத்திய கிழக்கு முழுவதும் நடந்து வரும் இந்த மோதலில் இணைந்துள்ளன.

இந்த மோதல் அதிகரிப்பதை தடுக்க அமெரிக்கா மேற்கொண்ட விடாப்பிடியான முயற்சிகள் அனைத்து ஒன்றும் இல்லாமல் போனது. அதிபர் சந்திப்புகள், எண்ணிக்கையற்ற ராஜ்ஜீய அதிகாரிகளின் பேச்சு வார்த்தைகள், பெரும் அளவிலான இராணுவ ஆயுதங்களை அனுப்புதல் என பல நடவடிக்கைகள் இதில் அடங்கும்.

இராக், ஏமென் போன்ற தொலைதூர நாடுகளில் இருந்தும் ராக்கெட்டுகள் ஏவப்படுகின்றன. எதிர்பார்க்கப்பட்ட வகையில் இஸ்ரேலும் இரானும் மாறி மாறி தாக்கிக் கொண்டன. அமெரிக்காவின் முயற்சிகள் செல்வாக்கற்றதாக காணப்பட்டது.

மோதல்கள் விரிவடைந்து வருகின்ற சூழலில் அதன் ஆரம்பப்புள்ளி முற்றிலுமாக பார்வையில் இருந்து மறையத் துவங்கி விட்டது.

ஊடகங்கள் அனைத்தும் மத்திய கிழக்கில் முழுமையான போர் சூழல் உருவாகும் என்ற எதிர்பார்ப்பில் இருந்த சூ மூலில், அக்டோபர் 7க்கு முன்பும் சரி பின்பும் சரி, காஸா மக்களின் வாழ்க்கை மறந்து போன ஒன்றாக மாறிவிட்டது.

தங்களின் வாழ்க்கையையே தலைகீழாக புரட்டிப் போட்ட அந்த நாளில் பாதிக்கப்பட்ட சில இஸ்ரேலியர்களும் கூட ஒதுக்கப்பட்டதாக உணர்கின்றனர்.

நாங்கள் புறந் தள்ளப்பட்டோம் என்று கூறுகிறார் பணைய கைதியாக பிடித்து வைக்கப்பட்டிருக்கும் நிம்ரோத் கோஹெனின் தந்தை யெஹதா



கோஹென். கடந்த வாரம் இஸ்ரேலின் கன் செய்திகளில் பேசிய அவர், 'இந்த அர்த்தமற்ற போரில் அனைத்து எதிரிகளையும் நம் பக்கம் திருப்பியதற்கு நெதன்யாகு தான் காரணம்.' என்று கூறினார்.

கடந்த அக்டோபர் 7-ஆம் தேதி நடந்த நிகழ்வு மிகவும் சிறிய நிகழ்வுதான் என்று உணர வைக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அவர் வெற்றியுடன் செய்து கொண்டிருக்கிறார் என்றும் யெஹதா கூறினார்.

அனைத்து இஸ்ரேலிய மக்களும் யெஹதா கோஹெனின் கருத்திற்கு உடன்படவில்லை. இஸ்ரேலின் எதிரிகள், யூத நாட்டை அழிப்பதற்கான துவக்கமாகவே ஹமாஸின் தாக்குதலை பார்க்கின்றனர்.

பேஜர்கள் வெடிப்பு, திட்டமிடப்பட்ட கொலைகள், தொலைதூரத்திற்கு சென்று இலக்கை தாக்கும் வான்வழி தாக்குதல்கள், தங்களின் பெருமையாக இஸ்ரேல் கருதும் உளவு பிரிவு மூலமான தாக்குதல்கள் என்று இஸ்ரேல் பதில் தாக்குதல்கள் நடத்தி, கடந்த ஆண்டு இழந்த தன்னம்பிக்கையை தற்போது மீட்டுள்ளது.

கடந்த வாரம் பேசிய நெதன்யாகு, மத்திய கிழக்கில் இஸ்ரேல் அணுக முடியாத பகுதி என்ற ஒன்று இல்லை என்று நம்பிக்கையுடன் கூறினார்.

அக்டோபர் 7 தாக்குதலுக்கு பிறகு பிரதமருக்கான தேர்தல் கருத்துக் கணிப்பில் மோசமான இடத்தில் இருந்தார் நெதன்யாகு. தற்போது அதில் முன்னேறி வருவதை அவரால் காண முடிகிறது. மிகவும் தைரியமான முடிவுகளை எடுக்கும் ஒரு உரிமமாக அது மாறுமா என்ற கேள்வியும் நீடிக்கிறது. ஆனால் இவை அனைத்தும் எதை நோக்கி செல்கிறது?

எப்போது இசை முடிய போகிறது? எங்கே அனைவரும் நிற்பார்கள் என்று யாருக்கும் தெரியவில்லை" என்று கூறுகிறார் – பிபிசியின் டுடே பாட்காஸ்ட் நிகழ்வில் பேசிய இரானுக்கான முன்னாள் பிரிட்டன் தூதர் சிமோன் காஸ்.

மோதலை நிறுத்தும் முயற்சியில் அமெரிக்கா தொடர்ந்து ஈடுபட்டுள்ளது. அமெரிக்காவின் மத்திய கட்டளை தளபதி (Centcom) மைக்கேல் குரில்லா இஸ்ரேலுக்கு வருகை புரிந்தது ராஜ்ஜீய தீர்வுகளை ஆய்வதற்கான ஒரு வருகை போல் இல்லாமல் நெருக்கடியை சமாளிக்கும் முயற்சியாகவே காணப்படுகிறது.

அமெரிக்க அதிபர் தேர்தல் இன்னும் நான்கு வாரங்களில் நடைபெற உள்ளது. மத்திய கிழக்கு முன்பு எப்போதும் இல்லாத வகையில் சிக்கலானதாக இருக்கின்ற இத்தகைய சூழலில் அமெரிக்கா எந்த விதமான புதிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள ஏதுவான நேரம் இது அல்ல.

தற்போதைக்கு, உடனடி சவாலானது இந்த மோதல் மிகப்பெரிய பிராந்திய மோதலாக உருமாறுவதை தடுப்பது. கடந்த வாரம் இரான் நடத்திய தாக்குதல் உட்பட அனைத்திற்கும் பதிலடி தரும் உரிமை இஸ்ரேலுக்கு இருப்பதாக அதன் கூட்டாளி நாடுகள் கருதுகின்றன.

இரானின் அந்த தாக்குதலில் இஸ்ரேலியர்கள் யாரும் கொல்லப்படவில்லை. இரான் இஸ்ரேலின் இராணுவம் மற்றும் உளவு அமைப்புகளை இலக்காக வைத்தே தாக்குதல் நடத்தியது. இருப்பினும் கடுமையான பதிலடி வழங்குவோம் என்று நெதன்யாகு உறுதி அளித்தார். பல வாரங்களாக நடைபெற்ற மோதல்களில் அற்புதமான உத்திகள் மூலம் வெற்றி பெற்ற பிறகு, இஸ்ரேலின் பிரதமர் பல பெரிய கனவுகளை காண துவங்கியுள்ளார்.



இரானிய மக்களுக்கு அவர் நேரடியாக வெளியிட்ட செய்தி ஒன்றில், தெஹ்ரானில் ஆட்சி மாற்றம் ஏற்பட இருப்பதாக மறைமுகமாக கூறினார். 'எப்போது இரான் விடுதலை அடையும்? மக்கள் நினைக்கும் காலத்திற்கு முன்பே அது நிகழ்ந்துவிடும். அனைத்தும் மாற்றமடையும்.' என்று அவர் கூறினார்.

இராக்கில் 2003-ஆம் ஆண்டு அமெரிக்க போர் தொடுத்த போது அமெரிக்காவின் நவீன பழமைவாதிகள் வெளியிட்ட கூற்றையே நெதன்யாகு எதிரொலிப்பதாக சிலர் கருதுகின்றனர். தாக்குதலுக்கு பிறகு இரு பது லட்சம் காஸா மக்கள் புலம் பெயர்ந்துள்ளனர்

ஆனால் 'எதிர்ப்பின் அச்சு' என்று அழைக்கப்படுகின்றன இரானின் ஆதரவு பெற்ற அமைப்புகளான ஹெஸ்பொலாவும் ஹமாஸும் ஒடுக்கப்படும் நிலையில், இரான் அந்த பிராந்தியத்தில் இருக்கும் ஒரே ஒரு வல்லரசு நாடான இஸ்ரேலை போரில் எதிர் கொள்ள முடியாத அளவிற்கு பலவீனமாக உள்ளது.

இரான் ஏற்படுத்தியுள்ள அச்சத்தை இஸ்ரேல் மிக விரைவாக கடந்து சென்று விட இயலும். சமீபத்திய வெற்றிகள் அதற்கு நம்பிக்கை அளித்தாலும் தனியாக அதனை செய்ய இயலாது என்பதையும் இஸ்ரேல் உணர்ந்தே இருக்கிறது. ஆட்சி மாற்றம் என்பது ஜோ பைடனின் நோக்கத்தில் இல்லை. அவரது துணை அதிபரான கமலா ஹாரிஸின் நோக்கத்திலும் இல்லை.

டொனால்ட் டிரம்பைப் பொறுத்த வரை ஒரே ஒருமுறை தான் இரானை தாக்கும் எண்ணம் அவருக்கு இருந்தது. 2019-ஆம் ஆண்டு அமெரிக்காவின் ஆளில்லா கண்காணிப்பு விமானத்தை தெஹ்ரான் சுட்டு வீழ்த்திய பிறகு அந்த முடிவை எடுத்தார்.

இருப்பினும் இறுதி நொடியில் அந்த எண்ணத்தில் இருந்து பின்வாங்கினார். ஆனால், அதற்கடுத்த 7 மாதத்தில் இரானின் தளபதி காஸிம் சுலைமானியை கொல்ல உத்தரவு பிறப்பித்தார்.

ஒரு வருடத்திற்கு முன்பு, மத்திய கிழக்கு சில தசாப்தங்களில் காணாத மிகப்பெரிய பேரழிவை சந்திக்க இருக்கிறது என்பதை வெகு சிலரே நினைத்து பார்த்திருப்பார்கள்.

காஸாவில் மோதல் துவங்கி இரண்டாம் ஆண்டை அடியெடுத்து வைத்துள்ள நிலையில் அனைவரும், போர் நிறுத்தத்திற்கு பிறகோ, அல்லது பரந்த போரில் மொத்தமாக மூழ்கிய பிறகோ காஸாவை மீண்டும் கட்டமைப்பது எப்படி என்றும், ஆள்வது எப்படி என்றும் ஆலோசித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஒரு கட்டத்தில், எப்போது ஹமாஸ், ஹெஸ்பொலாவை போதுமான அளவிற்கு ஒழித்து விட்டோம் என்று இஸ்ரேல் நினைக்கிறதோ, இது இந்த பிராந்தியத்தை மேலும் நெருக்கடிக்குள் கொண்டு செல்லாது என்று இஸ்ரேலும் இரானும் கூறுகிறதோ, அமெரிக்க அதிபர் தேர்தல் முடிவுக்கு வந்த பிறகோ, ராஜ்ஜீய ரீதியிலான பேச்சுவார்த்தைக்கு மற்றுமொரு வாய்ப்பு கிடைக்கலாம்.

அதுவரை, இந்த மோதலை நிறுத்த நீண்ட காலம் ஆகும் என்றே தோன்றுகிறது. நன்றி:- பிபிசி

# கண்மூடித்தனமான விசுவாசமும் கவனிக்கப்பட வேண்டியதும்!

(9ம் பக்கத் தொடர்ச்சி) ஆக, மாற்றம் என்பது மிகப் பெரிய அரசியல் ஏமாற்று. ஆனால், பிற ஆட்சியாளர்களிலிருந்து குறைந்தளவு சீரான அரச இயங்குதலை வேண்டுமானால் இவர்களால் வழங்க முடியும் என்பது தான் உண்மை. இதை அடிப்படையாக வைத்து அரசியலைப் புரிந்து கொள்ள முயலுங்கள்.

பாராளுமன்றத் தேர்தலில், மாற்றம் குறித்த தந்திரோபாய நடவடிக்கைகளைக் பரப்புரை செய்யும் என்பிபி, அளவில் பாதிக்கும் அதிகமாக இருக்கும் பெண்களை வேட்பாளர்களாக நிறுத்துமா? சம அளவு 50 வீதமானவர்களை களத்தில் இறக்குமா? சமூகப் பன்மைத்துவத்திற்கு ஏற்ப, விகிதாசார அடிப்படையில் பிற சமூகத்தைச் சேர்ந்த வேட்பாளர்களையும் களத்தில் இறக்குமா? குறைந்த பட்சம் இன்னும் ஒரு வாரத்திற்குள், என்பிபியின் பன்மைத்துவத்தையும், சம அந்தஸ்தையும், பிற சமூகங்களுக்கான இடத்தையும், பெண்களுக்கான வகிபாகத்தையும் என்ன செய்யப்போகிறார்கள் என்பதை அறிந்து கொள்ள முடியும். அதன் பிறகு மீதிக் கதைகளை பேச முடியும். ஏலவே ஆட்சி செய்த கட்சிகளை விட இவர்களால் என்ன மாற்றத்தைத்தான் கொண்டுவந்துவிட முடியும்? காலம் இரக்கமற்றது அனைத்தையும் வெளியே தூக்கி எறிந்து விடும்.

தமிழ் தரப்பு வெளியில் தேசியம் அவசியமற்றது அதை கை விட வேண்டும் என்பதைப் போன்ற கருத்துக்களும் மெல்ல மேல் கிழம்புவதைக் காண முடிகிறது. தேசியம் என்பது புதிய கருத்தியல் நிலைப்பாடுகள், உலக இயங்கியல் இன்றையத் தேவைகள் போன்றவற்றை உள்ளிணைத்து மீள் கருத்துருவாகம் செய்யப்பட வேண்டியதே ஒழிய, தேவையற்றது என்ற வகையில் கைவிட வேண்டிய ஒன்றல்ல.

உலகளவில் நாடுகளும், அதன் எல்லைகளும், அவற்றை நிர்வகிக்கும் அதிகாரங்களும் உள்ளவரை, தேசியம் தனது உள்ளடக்கத்தில் மாறுதல்களை செரித்துக்கொண்டு செழுமைப்படுமே தவிர, அழிந்துவிடாது. அதை கைவிட்டு விடவும் முடியாது.

தமிழ் தேசியத்தை கைவிட வேண்டும் எனக் கூறுபவர்கள், சிங்கள தேசியத்தையும் கைவிட வேண்டும் எனக் கூற வேண்டும். அது சாத்தியமில்லையே!. தேசியம் நெகிழ்ச்சியற்ற ஒரு இறுக்கமான கட்டமைப்பு அல்ல.

பென் ஆண்டர்சன் சொல்வதைப் போன்று அது ஒரு கற்பிதம். தேவைக்கும் சாத்தியத்திற்கும் உட்பட்டு மாற்றமடையக் கூடிய ஒன்றே. அந்த நெகிழ்ச்சியின் வடிவமாக இருக்கும் வரைத் தான் அதன் பயன் சமூகங்களுக்கும் மக்கள் கூட்டத்தினருக்கும் அவசியமான அரசியல் வழிமுறையாக இருக்கும்.

எதைக் கைவிட வேண்டும் என்பது, ஒரு சமூகம் எதிர்கொள்ளும் சமூக பண்பாட்டு அரசியல் தேவைகளின் அடியாக நிகழும் ஒன்று. எதை ஒரு சமூகம் கைவிட வேண்டும் என்பதை அந்த சமூகமும் மக்கள் கூட்டமும் தீர்மானிக்க வேண்டுமே ஒழிய, தீடிரென ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்று தென்பட்டு விட்டது. எனவே, அனைத்தும் சரியாகிப் போய் விட்டது என்று மதச்சாய்வான உணர்ச்சி சார்ந்த நம்பிக்கை வகைப்பட்டதல்ல.

ஒரு அரசு எப்படி நடந்து கொள்கிறதோ அதற்கேற்ப அனைத்தும் உதிர்ந்து விடும். அது மெல்ல மெல்ல நிகழும் ஒன்று. நம்பிக்கை ஒளிக்கீற்று தெரிந்துவிட்டது, அனைத்தையும் உதறி எறிந்து விட்டு வாருங்கள் சங்கமமாகி விடுவோம் எனக் கோரிக்கை விடுவது மிக ஆபத்தானது. புத்திசாலித்தனமானதும் அல்ல.

அரசின் நடவடிக்கைகளைப் பொறுத்தே அனைத்தும் மெதுவாக உதிர்ந்து விடும். எவ்வளவு பிடிவாதமாக இருந்த போதும். மக்களை போலியான நம்பிக்கையின் மூலம் பலவீனமாக மாற்ற வேண்டியதில்லை. என்பிபியின் மீது அதீத நம்பிக்கை வைத்தவர்கள், அவர்களின் பினாமிகளாக பிரச்சாரங்களுக்கு பணியில் அமர்த்தப்பட்டவர்கள் வேண்டுமானால் இந்த நம்பிக்கையை வெற்றிலைத் தட்டில் ஏந்திக் கொண்டும், குர் ஆன், ஹதீஸ் இலக்கியங்களில் கண்டு பிடித்துக் கொண்டும் உங்கள் முன் வரலாம். அவற்றின் மீது அவதானமாக இருங்கள்.

பிரச்சினை களைத் தீர்க்க தீர்க்க, அந்தப் பிரச்சினைக்கான காரணங்களும் மறைந்து கொண்டு வரும். அதற்காக பெரும் பதட்டத்தை அடைய வேண்டிய தில்லை. பொங்கி எழ வேண்டியதும் இல்லை. சமூகங்களிடையிலான ஒப்பந்தம் எப்போதும் அவசியமானது. அதற்காக தனித்துவங்களை இழந்து பிறிதொரு சாயத்தை பூசிக்கொள்ள வேண்டியதில்லை.

புதிய அரசை நம்பிக்கையீனமாக பார்க்க வேண்டியதுமில்லை. எச்சரிக்கை உணர்வோடு அணுக வேண்டியதும், ஆழமான அரசியல் உள்ளடக்கத்தோடு பார்க்க வேண்டியதும் அவசியம். பொங்கி எழும் உணர்ச்சியுடனும், அபரிமிதமான காதலுடனும், அளவுக்கு மீறிய நம்பிக்கையோடும் ஏற்பது என்பது சரியானதொரு நடைமுறையில்லை. அதை அரசாகவும், மக்களை கட்டுப்படுத்தும் நிறுவனமாகவும் பார்க்கத்தவற வேண்டியதில்லை. ஒரு தலைகீழ் அரசாக (உலகில் உள்ள அரசுகள்) பார்க்க வேண்டியதில்லை. அரசின் அனைத்து சலுகைகளும், அடக்குமுறைகளும், வன்முறைகளும், மக்கள் விரோத நடவடிக்கைகளும் உலகிலுள்ள அனைத்து அரசுகளைப் போன்று தான் இந்த அரசிலும் இருக்கும்.

அதிலும், பிற உலக நாடுகளையும், உள்ளூர் போட்டி அரசியல் கட்சிகளையும், அதிக தேவையை எதிர்பார்க்கும் மக்க ளையும் எப்படிக் கையாள வேண் டுமோ அதற்கான புதிய அரசின் நடவடிக்கைகள் தான் கவனிக்கப்பட வேண்டியதே ஒழிய. கண்மூடித்தனமான விசுவாசம் அல்ல.

பிற சமூகங்கள் தங்களின் அனைத்தையும் இழந்து, என்பிபியை நம்ப வேண்டும் எனக் கோருவது நேர்மையானதல்ல.

உங்கள் அரசின் செயல்பாடு களே பிற சமூகங்களின் கோரிக்கைகளை கைவிட வேண்டிய நிலைக்கு கொண்டு போக வேண்டும். அந்த நம்பிக்கையை உருவாக்கும் வரை, அந்த வகையான ஒரு ஆட்சி நிலை நிறுத்தப்படும் வரை கோரிக்கைகளை கைவிடக் கூடாது என்பதைத் தான் என்பிபி பிற சமூகங்களுக்கு முன்னே வைக்க வேண்டும். அது தான் நேர்மையானது. மாற்றத்திற்கான சரியான புள்ளியும் கூட.





வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  Give you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience in the field of Insolvency



Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# "பார் வேந்தன்" விக்கிக்கு கம்பவாருதியின் மடல்!



திரு.சி.வி. விக்னேஸ்வரன் அவர்கட்கு, வணக்கம்!

நூறு சதவீத கோபத்தோடும், வெறுப்போடும் தான் இக் கடிதத்தை நான் எழுதத் தொடங்குகிறேன். உங்கள் நலம் நோக்கிப் பிரார்த்திக்கக் கூட அஞ்ச வேண்டியிருக்கிறது. காரணம், தொடரும் உங்களது நடவடிக்கைகளின் தீமையேயாம். நீங்களே உங்கள் நலம் நோக்கிச் செயற்படாத போது நான் மட்டும் உங்கள் நலம் நோக்கிப் பிரார்த்தித்து என்னாகப் போகிறது? வாழ்ந்து போதீரே என உரைத்துத் தொடருகிறேன்.

உங்களை முன்னாள் நீதியரசர் என்றோ, முன்னாள் முதலமைச்சர என்றோ, முன்னாள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர என்றோ மரியாதை தந்து அழைக்கக்கூட என் மனம் ஒருப்படவில்லை. நாளுக்கு நாள் படியிறங்கிக் கொண்டிருக்கும் நீங்கள், முன்னர் வகித்த பதவிகளைப் பெருமை செய்ய விரும்பாதபோது, நாங்கள் மட்டும் அவற்றைச் சொல்லி உங்களை மரியாதை செய்து என்னாகப் போகிறது?

முன்பு அகில இலங்கை இந்துமாமன்றம் உங்களுக்குச் சத்திய வித்தகர் என்ற பட்டத்தினை அளித்துக் கௌரவித்திருந்தது. இன்றைய உங்களது நடவடிக்கைகளைப் பார்த்தால் அந்தப் பட்டத்தினைச் சத்தியம் விற்றவர் என்று மாற்றுவது தான் பொருத்தம் போல் தெரிகிறது. சில காலம் நீங்கள் எங்களது கழகத்தில் பெருந்தலைவராகப் பதவி வகித்தீர்கள். உங்களது தோற்றம், உங்களது பதவி என்பவை தான் அப் பதவியைத் தூக்கி நாங்கள் உங்கள் கையில் தரக் காரணமாயின. அப்போதெல்லாம் நீங்கள் எங்கள் கழகத் தைக் காத்து வந்ததாகத் தான் நினைத்திருந்தோம். இப்போது தான் நீங்கள் எங்களைக் காத்து வரவில்லை. நாங்கள் தான் உங்களைக் காத்து வந்திருக்கிறோம் எனும் உண்மை தெரிகிறது.

எங்கள் கம்பன்விழா மேடைகளில் புரட்சிகரமான சில செய்திகளைச் சொல்லிச் சொல்லித்தான் உங்களைத் தமிழ்ச் சமூகத்திற்கு நீங்கள் அறிமுகப் படுத்திக் கொண்டதாக இப்போதும் சிலர் சொல்லுகிறார்கள். அவை எல்லாம் அரசியலுக்குள் நுழைய நீங்கள் செய்த ஆரம்ப முயற்சிகள்தான் என்பது எங்களுக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை. நீதிபதி, நிமிர்வாகப் பேசுகிறார் என நினைந்து நாமும் மகிழ்ந்திருந்தோம்.

ஒருமுறை இறந்த போராளிகளுக்கு, எங்கள் கம்பன் விழாவில் அஞ்சலி செலுத்த வேண்டும் எனக்கேட்டு, திடீரென உங்களது பொய்யான சுதந்திரப் பற்றினைக் காட்ட முனைந்தீர்கள். அதுதான் நம் இனத்தின் அரசியலுக்குள் புகுவதற்கு நீங்கள் நேரடியாக அமைத்த புதுவழி என்பதும் அப்போது எமக்குத் தெரியாமல் போயிற்று.

உங்கள் அரசியல் பிரவேசத்திற்கு எங்களை நீங்கள் பலிக்கடாவாக்க முயன்றது தெரியாமலே, நல்லகாலமாக சூழ்நிலை அறிந்து நான் உங்கள் கோரிக்கைக்கு உடன்பட மறுத்து விட்டேன். அதைக் காரணம் காட்டி நீங்கள் எங்களை விட்டு விலகிச் சென்றீர்கள்.

அத்தோடு நிற்காத நீங்கள், கம்பன்விழாவில் போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தக் கம்பன்கழகம் சம்மதிக்காததால் நான் அங்கிருந்து விலகி வந்து விட்டேன் எனச் சொல்லி மிகச் சுலபமாகத் தியாகிப் பட்டம் தேட முயன்றீர்கள். உங்களது அந்தப் பொய்மையை விளங்காமல் சில முட்டாள்கள், இன்றும் கூட அதனை உண்மையெனப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு முன்பும் பலதரம் உங்களது பொய்மையை நான் இனங்கண்டிருந்தாலும், திடீரென வந்த உங்களது இனப்பற்று உண்மையாய் இருக்குமோ என்று நான் கூடச் சற்றுக் குழம்பித்தான் போனேன்.

அதனால் தான் வட மாகாண முதலமைச்சர் பதவிக்கான தேர்வு பற்றிச் சர்ச்சைகள் எழுந்த போது, நான் கூட அப்பதவிக்கு நீங்கள் வருவது பொருத்தம் என்பதாய் நினைந்து, உங்களுக்குச் சார்பாகப் பொது வெளிகளில் கருத்துத் தெரிவித்தேன்.

அங்ஙனம் நான் கருத்துத் தெரிவிப்பதற்கு வேறொரு காரணமும் இருந்தது. வன்னிப்போர் நிகழ்வில் நடந்த அவலங்களால், உலகளவில் பிரபல்யமாகிப் பேசப்பட்டுக் கொண்டிருந்த நம் இனப் பிரச்சினையைப் பற்றி ஆராயவெனப் பல வெளிநாட்டுத் தூதுவர்கள் இங்கு வந்து கொண்டிருந்த நேரம் அது.

அங்ஙனம் வருவோருக்கு இங்கு நடந்தவற்றை எடுத்துரைக்க உங்களுக்கு அமைந்திருந்த சட்ட அறிவு, வகித்த உயர் பதவி, கண்ணியத் தோற்றம் என்பவை உதவும் என நான் நினைத்ததால்த்தான், உங்களுக்கான ஆதரவைத் தெரிவித்திருந்தேன். தமிழ்க் கூட்டமைப்புக்குள் தகுதியுள்ள, உண்மை இனப்பற்றுள்ள தக்கவர்கள் அதிகம் இல்லாதிருந்ததாலும் அப்படி நான் நினைக்க வேண்டியிருந்தது.

பின்னாளில் தான் உங்களது தகுதிகளாய் நான் நினைந்தவையெல்லாம் வெறும் மாயத் தோற்றங்கள் தான் எனத் தெரியவந்தது. அதனை, தொடர்ந்த உங்களது செயல்களால் நீங்களாகவே தான் தெரியப்படுத்தினீர்கள்.

வெகு சீக்கிரத்தில் உங்களது பொய்மையை நான் இனம் கண்டு கொண்டேன். ஒரு பிழையானவரை நம் அரசியலுக்குள் கொணர்ந்து விட்டோம் என்பதை உணர்ந்து, முதன் முதலாக உங்களை விமர்சிக்கத் தொடங்கியவன் நான் தான்.

நான் உங்களைப் பொது வெளிகளில் விமர்சிக்கத் தொடங்கிய போது, உள்நாட்டில் இருந்து மட்டுமன்றி வெளிநாடுகளில் இருந்தும் கூட பலர் என்னைக் கண்டிக்கத் தலைப்பட்டார்கள். உங்கள் மேல் நான் கொண்ட பகையால் தான் உங்களை நான் விமர்சிப்பதாக எழுதி என்னை அவர்கள் திட்டித் தீர்த்தார்கள். ஏதோ ஒரு விழாவில், எனக்கு அடுத்தடுத்த இருக்கையிலிருந்த மாவை ஐயா அவர்கள் உங்களை நான் விமர்சித்த காரணத்தால், என்னைக் கண்டும் காணாதது போல் முகந்திருப்பி என்னை அலட்சியம் செய்தார். என்ன செய்வது? முன் அறிவைக் குற்றமாய்க் கருதும் ஓர் இனத்தில் பிறந்து விட்டதை நினைந்து இத்தகைய அலட்சியங்களைச் சகித்துக் கொண்டேன்.

கெட்டிக்காரனின் பொய்யும் புரட்டும் எட்டு நாளைக்குத்தான் எனும் அனுபவப் பழமொழி, மெல்ல மெல்ல உங்கள் விடயத்தில் வெளிப்படத் தொடங்கியது. கொஞ்சம் கொஞ்சமாக உங்களது உண்மை முகம் தமிழ் மக்களுக்குத் தெரிய ஆரம்பித்தது. ஏமாறுவதற்கென்றே பிறந்த நம்மினத்தார் சிலர், அப்போதும்கூட உங்களை ஓர் உண்மை மனிதராகவும், தியாகியாகவும் நினைக்கத் தலைப்பட்டது தான் கொடுமையிலும் பெரிய கொடுமை. அத்தகைய ஏமாளிகள் தோள் கொடுத்துத் தூக்கியதால்தான் நீங்கள் பாராளுமன்றத்துக்குள்ளும் நுழைய முடிந்தது.

உங்களது வஞ்சனைக் குளறுபடிகள் பற்றி இதற்கு முன்பும் பல கட்டுரைகளில் நான் எழுதியிருக்கிறேன். செத்த பாம்பை எத்தனை தரந்தான் அடிப்பது? ஆனாலும் இன்றைய சூழ்நிலைத் தேவை கருதி அவற்றுள் ஓரிரண்டை இவ்விடத்திலும் சொல்லத் தோன்றுகிறது.


பதவிக்கு வந்தநாள் தொடக்கம் உங்கள் செயல்களில் ஒரே மாறாட்டந்தான். அவை உங்களின் வயதால் வந்த மாறாட்டங்கள் அல்ல. வஞ்சனையால் வந்த மாறாட்டங்கள்.

பதவிப் பிரமாணத்தில் நீங்கள் செய்த குளறுபடி, கட்சியை உடைக்க நீங்கள் செய்த குளறுபடி, தமிழ்மக்கள் பேரவை உருவாக்கத்தில் நீங்கள் செய்த குளறுபடி, சுன்னாகத் தண்ணீர் மாசுபட்டதில் நீங்கள் செய்த குளறுபடி, மாகாண அமைச்சர் பதவி வழங்குவதில் நீங்கள் செய்த குளறுபடி, மாகாண அமைச்சர்களைக் குற்றவாளியாக்கி நீங்கள் செய்த குளறுபடி, அரசாங்கத்திடம் வாகனம் வாங்க நீங்கள் செய்த குளறுபடி என நீங்கள் செய்த குளறுபடிகளின் பட்டியல் இன்றுவரை நீண்டு கொண்டே இருக்கிறது.

இன்னும் எத்தனையோ எழுதலாம். திரும்பத் திரும்ப இவற்றை எழுதி எனக்கே சலித்து விட்டது. யார் கண்டது? ஏமாறுவதற்கென்றே பிறந்த நம் ஈழத்தமிழர்கள் இன்னும் உங்களை நம்பி வேறு உயர்பதவிகளைத் தந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எத்தனையோ போராளிகள் சிறைப்பட்டிருக்கவும், அது பற்றிச் சிறிதும் கவலைப்படாமல், யாழ் வந்த இந்தியப் பிரதமரிடம் உங்களது IRCகுருவான குற்றவாளி பிரேமானந்தாவின், சிறைப் பட்டிருந்த(22ம் பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்

சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை

அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)

அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு

சைவக்குருக்களை

தொடர்பு கொள்ளவும்

"இணுவில் திருவூர்"

சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்

647.629.5468

msvkurukkal@gmail.com

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?

மேஷம்

மேடராசி அன்பர்களே! பலராலும் செய்ய முடியாத காரியங்களை வெற்றிகரமாக முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் வாக்கு வன்மையால் எளிதாக நல்ல லாபம் கிடைக்க பெறுவீர்கள். பிரச்சனைகளை பேசியே தீர்த்து விடுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் பதவி உயர்வு, கூடுதல் பொறுப்பு கிடைக்க பெறுவார்கள். எதிலும் திட்டமிட்டு செயலாற்றுவதால் மேலதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கும்.

ரிஷபம்

ரஷபராசி அன்பர்களே! புத்தி சாதுர்யத்தை பயன்படுத்தி காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். செயல் திறன் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் தொடர்பாக அலைச்சல் உண்டாகும். புதிய ஆர்டர்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். பணவரத்து திருப்தி தரும். புதிய வேலைக்கு முயற்சி செய்வது நன்மை தரும். வாழ்க்கை துணை உங்களுக்கு பல விதத்திலும் உதவிகள் செய்வார்.

மிதுனம்

மிதுனராசி அன்பர்களே! மனதில் வீண் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். நெருக்கடியான சந்தர்ப்பத்தில் உதவிகள் கிடைப்பது கடினமாக இருக்கும். எந்த காரியங்களில் ஈடுபட்டாலும் மனத் தடுமாற்றம் இல்லாமல் இருப்பது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். அதிகாரிகள் கூறிய வேலையை செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படும். சகஊழியர்களிடம் அனுசரித்து செல்வது நல்லது.

கடகம்

கடகராசி அன்பர்களே! செயல் திறன் மேலோங்கும். மதிப்பும், மரியாதையும் கூடும். தொழில் வியாபாரம் தொடர்பாக பயணங்கள் சென்று வரவேண்டி இருக்கும். வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திப்பர். குற்றச்சாட்டுகளுக்கும் ஆளாகலாம் கவனம் தேவை. குடும்பத்தினரிடம் வாக்குவாதத்தில் ஈடுபடாமல் அனுசரித்து செல்வது நல்லது. மருத்துவம் தொடர்பான செலவும் ஏற்படலாம்.

சிம்மம்

சிம்மராசி அன்பர்களே! நண்பர்களுடன் சேர்ந்து செய்யும் காரியம் சாதகமான பலன் தரும். திட்டமிட்டு செய்யும் பயணங்கள் வெற்றி பெறும். செலவு செய்வது பற்றி யோசனை செய்து தேவையென்றால் மட்டுமே செய்வீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் சக பணியாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து முக்கிய முடிவுகள் எடுப்பது நன்மை தருவதாக இருக்கும்.

கன்னி

கன்னிராசி அன்பர்களே! எதிர்காலம் தொடர்பான திட்டங்கள் மனதில் தோன்றும். எதையும் முன்னேற்பாட்டுடன் செய்வீர்கள். விவேகம் உண்டாகும். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக நடந்து முடிய திறமையாக செயல்படுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் ஏற்கனவே செய்த திறமையான பணிகளுக்கு உரிய நற்பலனை பெறுவார்கள். குடும்பத்தில் தாய்வழி உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.

துலாம்

துலாம்ராசி அன்பர்களே! அறிவு திறமை வெளிப்படும். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு உண்டாகும். அடுத்தவர்களின் குற்றச்சாட்டுக்கு ஆளாகநேரிடலாம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் இருக்கும். வாடிக்கையாளர்களிடம் சாமர்த்தியமாக பேசுவதன் மூலம் வியாபாரம் வளர்ச்சி பெறும். பிறர் கூறும் ஆலோசனைகளை ஆராய்ந்து பார்த்து செய்வது நல்லது. உத்யோகஸ்தர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். வாக்குவாதத்தையும், கோபத்தையும் தவிர்ப்பது நல்லது.

விருச்சிகம்

விருச்சிகராசி அன்பர்களே! நீங்கள் நல்லதாக பேசினாலும் எதிரில் உள்ளவர்கள் அதை தவறான கண்ணோட்டத்துடனேயே பார்ப்பார்கள். மற்றவர்களின் செயல்களால் மன அமைதி கெடவும் வாய்ப்பு உண்டு. தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் கூடுதல் முயற்சிக்கு பிறகு எதிர்பார்த்தபடி நடந்து முடியும். வியாபாரத்தில் புதுமையை செய்வீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு பிடித்தமான இடத்திற்கு வேலை மாற்றம் கிடைக்கலாம்.



தனுசு

தனுசுராசி அன்பர்களே! கடினமான பணிகளையும் செய்து முடிக்கும் துணிச்சல் ஏற்படும். காரிய வெற்றியால் மனதில் சந்தோஷம் உண்டாகும். இருக்கும் இடத்தை விட்டு வெளியில் சென்று தங்க நேரிடும். தொழில் வியாபாரம் பற்றி மனதில் இருந்த கவலை நீங்கி தைரியம் உண்டாகும் கணவன், மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் குறையும். உத்யோகத்தில் இருப்பவர்கள் வேலையை சிறப்பாக செய்து முடிப்பர்.

மகரம்

மகரராசி அன்பர்களே! எந்த ஒரு காரியமும் வெற்றியடைவதுடன் லாபகரமாகவும் இருக்கும். இழுபறியாக இருந்த ஒரு சில விஷயங்கள் நல்ல முடிவுக்கு வரும். வீடு, வாகனங்கள் வாங்கும் நிலை உருவாகும். தொழில், வியாபாரம் முன்னேற்றம் காணப்படும். வியாபார வளர்ச்சிக்கு புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு நிலுவையில் உள்ள பணம் கைக்கு கிடைக்கும். பயணங்களால் லாபம் கிடைக்கும்.

கும்பம்

கும்பராசி அன்பர்களே! எதையும் ஆராய்ந்து பார்த்த பிறகே அதை செய்ய முற்படுவீர்கள். தொட்ட காரியம் வெற்றியில் முடிந்தாலும் சற்று கால தாமதம் ஆகலாம். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். தொழில், வியாபாரம் மிகவும் சிறப்பாக நடைபெறும். வியாபாரம் மற்றும் தொழிலை விரிவுபடுத்துவது பற்றி திட்டங்களை செயல்படுத்துவீர்கள். பயணங்கள் சாதகமான பலனை தரும். உத்யோகஸ்தர்கள் முன்னேற்றம் காண்பர்.

மீனம்

மீனராசி அன்பர்களே! ஆக்கபூர்வமான யோசனைகள் தோன்றும். கடித போக்குவரத்து அனுகூலமான பலனை தரும். புது வியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும். தொழிலில் முன்னேற்றம் காணப்படும். சாமர்த்தியமாக வாடிக்கையாளர்களுடன் பேசிஅவர்களை தக்க வைத்துக் கொள்வீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் எதிர் காலம் பற்றிய திட்டங்களை வகுப்பார்கள். குடும்பத்தில் இருப்ப வர்களிடம் தன்மையாக பேசி பழகுவது நல்லது.


வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.


# அநுரவுக்குஅம்பிகாவின் அட்வைஸ்

(17ம் பக்கத் தொடர்ச்சி) அம்பிகா சந்தேகிக்கின்றாரா? அதற்காகத்தான் தனது பதிவில் சிங்கள பௌத்த தேசிய வாதிகளை வசீகரித்தால் தமிழ் மக்களின் நம்பிக்கையை பெறமுடியாது என்று இலங்கையின் அரசியல் வரலாற்றையும், இனப்பிரச்சினைக்கான தீர்வுகளையும், அதில் ஜே.வி.பி.யின் கடந்த கால அரசியலையும் கணக்குப் போட்டு இந்த விடயத்தை குறிப்பிட்டாரா?

ஆனால் ஜே.வி.பி.- என்.பி.பி. ஜனாதிபதி அநுரகுமார குமார திசாநாயக்க தலைமையில் அவர்களுக்கு இருக்கின்ற கட்சி கட்டமைப்புக்கூடாக மிகக் கடுமையாக சர்வஜன வாக்கெடுப்பில் சிறுபான்மை தேசிய இனங்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்காக சிங்கள மக்கள் மத்தியில் களத்தில் இறங்கி பிரச்சாரம் செய்தால், அவர்களோடு சிறுபான்மை தேசிய இனங்களும், அவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகளும் இதற்காக உழைத்தால் புதிய அரசியலமைப்பின் ஊடாக ஒரு சமத்துவ தீர்வை அடைவது கஷ்டமானதாக இருக்கப்போவதில்லை. அதில் ஜனாதிபதிக்கு இருக்கக்கூடிய மிகப் பாரிய சவால் சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு எதிராக போராடுவதாக இருக்கும்.

பாராளுமன்ற தேர்தலுக்கு பின்னரான புதிய அரசியலமைப்பு ஒன்றில் ஒரு சமத்துவமான, சமூக நீதியான அரசியல் தீர்வை சிறுபான்மை தேசிய இனங்கள் அவர்களின் அடையாளங்களோடு எதிர்பார்க்கிறார்கள். இன, மத அடையாளங்களை கடந்த இலங்கை தேசியத்தில் சிறுபான்மையினர் பங்காளிகளாக வேண்டும் என்றால் சிங்கள, பௌத்த அடையாளங்களும், முன்னுரிமைகளும் அற்ற மதசார்பற்ற, மொழிப்பாகுபாடுகளை கடந்த இலங்கைக்கு தங்களை அர்ப்பணிக்க சிறுபான்மை தேசிய இனங்கள் இணங்குவார்கள். இன,மத,மொழி, பிரதேச வேலிகளை கடந்த ஒரே இலங்கை சமூக கனவு நனவாகும்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இதனை சாதித்து புதிய வரலாற்றை எழுத வேண்டும்!

# "பார் வேந்தன்" விக்கிக்கு

(21ம் பக்கத் தொடர்ச்சி) சீடர்கள் சிலரை விடுவிக்குமாறு கேட்டு நீங்கள் கடிதம் எழுதியதைக் கண்ட பிறகும் நம் இனம் உங்களை அடையாளங் கண்டுகொள்ளாமல் விட்டதை உங்கள் அதிர்ஷ்டம் என்பதா? நம்மினத்தின் துரதிர்ஷ்டம் என்பதா? எனத் தெரியவில்லை.

அண்மையில் என்னைச் சந்தித்த தமிழரசுக்கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவர், பிரேமானந்தாவின் சிஷ்யர் இவர் எனத் தெரிந்த பிறகேனும் இவரை நாம் இனங் காணாதது பெரிய தவறுதான் எனச் சொல்லிக் கவலைப் பட்டார். காலங்கடந்த கவலை அது.

கொலையாளி, கற்பழிப்புச் செய்தவர், ஏமாற்றுப் பேர்வழி என்றெல்லாம் குற்றஞ்சாட்டி இந்திய உச்ச நீதிமன்றம் ஆயுட்காலத் தண்டனை வழங்கிய ஒருவரை, ஓர் உயர்நீதிமன்ற நீதியரசராய் இருந்து கொண்டு இவர் தான் என் குருவெனத் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்க உங்கள் ஒருவரால் தான் முடியும் என்று கருதுகிறேன்.

உன் நண்பன் யார் என்று சொல் நீ யார் என்று நான் சொல்கிறேன் என்று சொல்வார்கள். இன்று உன் குரு யார் என்று சொல் நீ யாரென்று நான் சொல்கிறேன் என உங்களை வைத்து அத்தொடரை மாற்றிக் கொள்ளலாம் போல்த் தெரிகிறது.

உங்கள் குற்றங்களின் சிகரமாக, மீண்டும் உங்கள் குருவின் பெயர் சொல்லி மற்றொரு அசிங்கத்தை அரங்கேற்றி இருக்கிறீர்கள். குருவின் மற்றொரு சீடர் குடும்பத்தின் பெண்மணியொரு வருக்குச் சாராய லைசென்ஸ் வாங்கிக் கொடுத்து இன்று பழையபடி பார் போற்றும் பெரிய மனிதராய்ப் புகழ்(?) பெற்றிருக்கிறீர்கள்.

அப் பெண்மணி பற்றி வரும் செய்திகள் மிகக் கேவலமானதாய் இருக்கின்றன. மூன்று சாராயக் கடைகளை அப் பெண்மணி குத்தகைக்கு எடுத்து வைத்திருப்பதாய் வரும் செய்தியோ, பல திருமணங்கள் செய்ததாய் வரும் செய்தியோ தராத அதிர்ச்சியை, ஓர் அபலைப் பெண்ணுக்கு வாழ்வளிக்க அவ்வுதவியைச் செய்தேன் எனத் தாங்கள் விடுத்திருக்கும் அறிக்கை தந்திருக்கிறது.

அசிங்கத்தில் அசிங்கமாக கொஞ்சம் கூட வெட்கமில்லாமல் ஊடகங்களைக் கூட்டி கணவனை இழந்த ஓர் அபலைப் பெண்ணிற்கு உதவி செய்வதற்காகவே அந்த சாராயக் கடை லைசென்ஸை வழங்குமாறு சிபாரிசு செய்தேன் எனக் கூச்சமில்லாமல் பேசியிருக்கிறீர்கள். சீசீ! இவையும் சிலவோ? என நாம் கூசி நிற்க வேண்டியிருக்கிறது.

இதற்குப் பின்பும் உங்களை எவரேனும் நம்பத் தயாரானால் அவர்களைப் பழைய எதனாலோ தான் அடிக்க வேண்டும் என நினைக்கிறேன். இனியும் உங்களது செயல்களிற்கு எவரேனும் சமாதானம் செய்ய முன் வருவார்களானால், அவர்களைப் போட நரகலோகத்தில் கூட இடம் இருக்காது என்பது நிச்சயம்.

அதிகம் பேசி என்ன பயன்? நம்மினத்தின் கஷ்ட காலம். நீதித்துறைக்கு வந்த அவமானம் என்பதாய்ச் சொல்லி விடுவதைத் தவிர எம்மால் என்ன செய்ய முடியும்? இனியும் மக்கள் முன் வரத் துணிவீர்களானால் அந்தக் கேவலத்தைச் சொல்ல வார்த்தைகள் இருக்காது. எஞ்சிய வாழ்க்கையை யாவது நல்லபடி வாழ முயலுங்கள்

(5ம் பக்கத் தொடர்ச்சி) நிர்வகித்து வரும் சுமந்திரன் கட்சியை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்வதை அனுமதிக்க முடியாது. இலங்கை தமிழரசுக் கட்சி வரலாற்றில் பல தியாகங்களாலும், வீரம் செறிந்த பல போராட்ட சரித்திரங்களாலும் உருவாக்கப்பட்டது. 2002ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழ்த் தேசியத் தலைவரின் உயர்ந்த சிந்தனையின் அடிப்படையில் வீடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக உருவாக்கப்பட்டது.

அந்த வீட்டில் இருந்த அனைவரையும் வெளியேற்றி, தமிழரசுக் கட்சிகளின் தூண்களையும் வெளியேற்றி, மேலும் தென்னிலங்கையின் முகவர் அரசியல் செய்வதற்கு முற்படுகின்ற சுமந்திரனின் தான் தோன்றித் தனமான செயற்பாடு ஒட்டு மொத்த தமிழரசுக் கட்சியையும் அழிக்கும். எனவே என்னை நேசிக்கும் யாழ்.கிளிநொச்சி தேர்தல் மாவட்டம், வடக்கு கிழக்கு மக்களுக்கு நான் அறியத் தருவது என்னவென்று சொன்னால் வீரத்தின் பால் வழிநடத்தப்பட்ட கட்சி இன்று சோர்விழந்து சோரம் போகின்ற ஒரு ஆபத்தான நிலையில் இருக்கின்ற படியினால் அனைத்துப் பொறுப்புக்களில் இருந்தும் நான் விலகுகின்றேன்.

தமிழ் தேசிய விரோதிகளின் கைகளுக்குள் சிக்குண்ட தமிழரசு கட்சியில் தொடர்ந்தும் பயணிப்பது பொருத்தமற்றது என்பதால் இந்த முடிவு எட்டப்படுகிறது. தனிநபர்களின் தன்னிச்சையான போக்குக்குள் சிக்குண்டு தமிழரசு கட்சி சின்னாபின்னமாகி இருக்கின்ற நிலையில் தொடர்ந்தும் தமிழரசு கட்சியில் பயணிக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு வாங்க.. விற்க..
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*

நாளை பற்றிய கவலையை தவிர்க்க நம்பிக்கையானது
காப்புறுதி ஒன்றே!
• Life Insurance
• Critical Illness Insurance
• Disability Insurance
• Mortgage Insurance
• Super Visa Insurance
• RESP, RRSP and TFSA
Arun KULASINGAM
Life Insurance Agent
416.357.2847
kulasingam33@yahoo.ca
iA Financial Group · Canada Protection Plan · Assumption Life · Foresters · KABIS

BAYVIEW HOMES DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Variance
Lot Severance
Legal Basement
Project Management
உங்கள் சகல City Permit தேவைகளுக்கு
Kathir
416 856 6900
Subramaniam Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email:kathirhomes@gmail.com

# தமிழா! எல்லை மீறி ஜே.விபி.யை நம்பாதே!

இலங்கையின் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான ஜெனீவா தீர்மானத்தை (A/HRC/57/L.1) ஜேவிபி அரசாங்கம் நிராகரித்தது குறித்து சிலர் சங்கடப்படுகின்றார்கள் திரு அனுர குமார திசாநாயக்க, திரு டில்வின் சில்வா, திரு விமல் ரத்நாயக்க போன்ற ஜேவிபி தலைவர்கள் இனவாதமற்றவர்கள் என நம்பும் இது சிலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம்

ஆனால் ஜேவிபி சிங்கள பௌத்த மேலாண்மை கருத்தியலை பகிர்ந்து கொள்ளும் அமைப்பு என்பதை புரிந்து கொள்ளுபவர்களுக்கு இதில் ஆச்சரியப்பட எதுவுமே இல்லை உண்மையில் ராஜபக்சே குடும்பத்தின் வெற்றியில் சக பிரயாணிகளாக ஜேவிபி இருந்தது அதே போல ஜேவிபி யுத்த வெற்றி வாதத்திற்கு எதிரானவர்களும் அல்ல

இதனால் தான் முப்படைக்கான சலுகைகளை குறைக்க மாட்டோம் என இப்போதும் ஜேவிபி வெளிப்படையாக பேசுகின்றது போர்க் குற்றவாளிகளை தண்டிக்க மாட்டோம் என்கின்றது

நல்லாட்சி காலத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கைக்கு தாம் வழங்கிய பதிலில் (Appendix 1 B) மாகாண ஆளுநரின் அதிகாரம் குறைக்கப்படக் கூடாது என்ற நிலைப்பாட்டை ஜேவிபி சார்பில் அனுர குமார திசாநாயக்க, திரு விமல் ரத்நாயக்க ஆகியோர் எடுத்தனர் இது தவிர இதே ஜேவிபி திரு சுனில் ஹந்துநெத்தி மூலம் சுனாமி பொது கட்டமைப்பை (P-TOMS) நீதிமன்றில் நீர்த்து போக செய்திருந்தது

இந்த சுனாமி நிர்வாகக் கட்டமைப்பானது எந்தவிதமான அரசியல் அதிகாரத்தையும் கொண்டிருக்கவில்லை. அத்துடன் அதற்கு உருப்படியான நிர்வாக வலுவும் இருக்கவில்லை. மிகவும் வரையறுக்கப்பட்ட செயற்பாடுகளைக் கொண்ட ஒரு தற்காலிக ஒழுங்கமைப்பையே ஜேவிபி நிராகரித்ததிருந்தது

பிரதமர் ஹரினி அமரசூரிய அவர்கள் கூட University of Edinburgh இல் சமர்ப்பித்த தனது PhD Dissertation ,y; njspthf "The party which managed two ideo-political currents of Marxism and Sinhala nationalism most adroitly was the JVP" என பதிவு செய்துள்ளார் ஆகவே ஜேவிபி தமிழர்களின் பிரச்சனைகளை நேர்மையாக ஒருபோதும் அணுகாது.



இந்த அரசியல் உண்மைகளில் நாங்கள் தெளிவாக இருந்தால் தேவையற்ற ஏமாற்றங்களை எதிர் காலத்தில் சந்திக்க வேண்டி வராது என்பதைப் புரிந்து கொள் தமிழா!

வானிலை கணிக்கக்கூடியது ஆனால்
உங்கள் எதிர்காலம் அப்படியல்ல
எங்கள் நோக்கம் உங்கள்
எதிர்காலத்தை பாதுகாப்பது
AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
LIFE INSURANCE · CRITICAL ILLNESS · DISABILITY INSURANCE
NON-MEDICAL INSURANCE · SUPER VISAS · RRSP & RESP
WE TRULY CARE FOR YOU & YOUR LOVED ONES!
647 401 5800 · ajithinsurance.ca · ajithsaba@gmail.com
10 Thornmount Dr, Scarborough, Ontario M1B 3J4